Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

இலவச பிரதி

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-. 12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை–04 | 19–11–2005 | சனிக்கிழமை | ஓசை–275

FedEx Express®

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும் ஏனைய அன்பளிப்புப்பொருட்களை துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும் உத்தரவாதத்துடன் அனுப்பி

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Tel - 021 222 7835

# சனாதிபதியாக மகிந்த இன்று பதவியேற்கிறார்

(கொழும்பு)



*சிறிலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ இன்று சனிக்கிழமை பதவியேற்கவுள்ளார். சிறிலங்கா தலைமை நீதிபதி சரத் என். சில்வா முன்னிலையில் இன்று பிற்பகல் 1.20 மணிக்கு மகிந்தராஜபக்ஷ பதவி யேற்கிறார்என்று கொழும்புச் செய்திகள்தெரிவிக்கின்றன.*

சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சின்னத்தில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில், மகிந்த ராஜபக்ஷ 48 இலட்சத்து 80 ஆயிரத்து 950வாக்குகளைப் பெற்று, 50.33 என்ற வீதத்தின் அடிப்படையில் சிறிலங்காவின் புதிய சனாதிபதியாக தொிவாகியுள்ளார். இத்தேர்தலில் விக்கிரம சிங்கவை ஒரு (12ஆம் பக்கம் பார்க்க)

# அநுரா பண்டாரநாயக்கவுக்கு பிரதமர் பதவி இல்லை!

## மகிந்த தரப்பில் தீர்மானம்

(கொழும்பு)



*சிறிலங்கா பிரதமராக அநுரா பண்டாரநாயக்கவை நியமிப்பதில்லை என்று சிறிலங்காவின் புதிய சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.*

சிறிலங்கா சனாதிபதிப் பதவியிலிருந்து விலகும் சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரரான அநுரா பண்டாரநாயக்க, சுற்றுலா மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சராக உள்ளார். மகிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ சனாதிபதி வேட்பாளராக அறிவித்த போது மகிந்த வகிக்கும் பிரதமர் பதவிக்கு அநுரா பண்டார நாயக்கவை நியமிக்க முடிவு செய்யப்பட்டது.ஆனால் சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு அநுரா பண்டாரநாயக்க முழுமையான ஒத்துழைப்பு (12ஆம் பக்கம் பார்க்க)

## மறு தேர்தல் நடாத்தும் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை மீளவும் நடத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய, பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் கூறியதாவது,

வடக்கு-கிழக்கில் மறு தேர்தல் நடத்த வேண்டும் என்று (12ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்த வெற்றி பெற்றிருப்பதால் வன்முறைகள் வெடிக்கும் அபாயம்!

## நோர்வே விசேட தூதுவர் எரிக் கருத்து

சிறிலங்கா சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருப்பதால் சிறிலங்காவில் வன்முறைகள் வெடிக்கும் அபாயம் உள்ளதாக நோர்வே அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவருமான எரிக் சூல்ஹெய்ம் கருத்துத்தெரிவித்துள்ளார்.

நோர்வே தேசிய என்.ஆர்.கே வானொலிக்கு அவர் அளித்த நேர்காணலில், இலங்கையில் நிலைமை இப்போது மிகவும் சிக்கலானதாக இருக்கிறது என்றார்.

இலங்கையின் முக்கிய பகுதிகளில் கட்டுப்படுத்த இயலாத மிகப்பாரிய வன்முறைகள் வெடிக்கக் கூடிய அபாயம் உள்ளது என்றும் கூறிய எரிக், முடங்கிக் கிடக்கும் அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்கு வதற்காக விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார். சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்திருப்பதன் மூலம் நிலைமை மிக, மிக மோசமடைந்து இருக்கிறது என்றும் சூல்ஹெய்ம் சுட்டிக்காட்டினார். எரிக். தனது பேட்டியில் ரணிலை நன்கு பாராட்டியும் உள்ளார்.

## வீரச்சாவு

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 14.11.2005அன்று தேசவிரோதக்குழுவினரின் தாக்குதலின் போது இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

லெப்கேணல்:- முகிலன் / சுரேஸ் (பழனிவேல் - ஜெயக்குமார் விநாயகபுரம் திருக்கோயில் அம்பாறை தற்போதைய முகவரி:- காயத்திரி அம்மன் கோயில் வீதி சின்னத்தோட்டம் திருக்கோயில் 04 அம்பாறை)

கப்டன் :-புன்னகையன் /வெள்ளை (யோகநாதன் ஜெனார்த்தனன் மைலன் கறிச்சை வாழைச்சேனை (12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் பேசும் மக்களிடையே பிரிவினையை உருவாக்க தீய சக்திகள் முயற்சி

## அக்கரைப்பற்று படுகொலைக்கு புலிகள் கண்டனம்

(அம்பாறை)

தமிழ் பேசும் உறவுகள் மத்தியில் பிரிவினையை உருவாக்க தீய சக்திகள் மறைமுகமாக செயற்பட்டுவருகின்றன என விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அத்தோடு அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசல் சம்பவத்திற்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசலில் இருந்த அப்பாவி முஸ்லிம் சகோதர உறவுகள் மீது நேற்று காலை 05.15 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இச்சம்பவத்தின் போது கொல்லப் பட்டவர்களின் (12ஆம் பக்கம் பார்க்க)

# கட்சிகளுடன் பொது உடன்பாட்டிற்கு வந்த பின்னரே புலிகளுடன் பேச்சு!

## அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

உடனடியாக தெற்கில் உள்ள அரசியல் கட்சிகளுடன் பொது உடன் பாட்டிற்கு வந்த பின்பே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்போம் என அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

பிரதமர் சனாதிபதியானதும் எந்தெந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பார் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல்பிரச்சார ஒருங்கிணைப்பாளரும், அமைச்சருமான மங்கள சமரவீரவிடம் சர்வதேச ஊடகம் ஒன்று வினா எழுப்பியபோதே மங்களசமரவீர இவ்வாறு கூறினார்.

இந்த வெற்றி மகிந்த சிந்தனைக்கு-சமூக சனநாயகத்திற்கும் கிடைத்தபெரு வெற்றி எனவும் அவர்மேலும் கூறினார்.

# அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசலில் தாக்குதல் நான்கு அப்பாவிப் பொதுமக்கள் பலி!

## இருபதுக்கும் மேலானோர் காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் பெரிய ஜும்மா பள்ளி வாசலில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் நடத்தப்பட்ட கைக்குண்டு தாக்குதலில் நான்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இருபதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தின்போது பள்ளிவாசலில் 100இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தாகவும் அப்போது உந்துருளியில் வந்த இரண்டு நபர்கள் கைக்குண்டுகளை வீசிவிட்டுத்தப்பிச் சென்றுள்ளதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர். இதையடுத்து அந்தப் பிரதேசத்தில் பதற்ற (12ஆம் பக்கம் பார்க்க)

# இரு ஏறாவூர் முஸ்லிம் வாசிகள் வாழைச்சேனையில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் நேற்று அதிகாலை சிறிலங்காப் பொலிசாரால் இரு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்ட இரு சடலங்களும் ஏறாவூர் பிரதேச முஸ்லிம்களுடையது என்று பதில் நீதிபதி வினோபா இந்திரன் முன்னிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் சின்னலெப்பை கபீப் மொகமட் (வயது 34), மீராசாகிபு (12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நாள் நவம்பர் – 27

"எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது."

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.

## மாவீரர் நாளில் மாலை 5 மணி முதல் தமிழீழ தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பு



தமிழீழ தேசிய தொலைக்காட்சி மாவீரர்நாளன்று தமிழீழ நேரம் மாலை ஐந்து மணிமுதல் இரவு 7.30 வரை ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரே நேரத்தில்தனது ஒளிபரப்பை மேற்கொள்ளவுள்ளது. இதில்தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் மாவீரர்நாள் உரை நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணனி அச்சுப்பதிப்புத் துறையில் புதிய நுட்பங்களை உருவாக்கக் கூடியAdobe Pagemaker வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகட்கு: வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி.13074)

### தவறவிடப்பட்டது

2005.11.14 அன்று முத்துஐயன்கட்டு ப.நோ.கூ. சங்கத்தின் ஆவணங்கள் அடங்கிய ஐந்துசிப் கறுப்புநிற கைப்பை ஒன்று ஒட்டுசுட்டானுக்கும் கரிப்பட்ட முறிப்புக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து இதனை கண்டெடுத்தவர்கள் சங்கத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6646)

### தவறிவிட்டது

15.11.2005 அன்று நெடுங்கேணிக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட முல்லைத்தீவு வீதியில் இ.ஜெயகாந்தன் என்பவரின் கையடக்க தொலைபேசி (SIMENS - A60) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சேவா லங்கா மன்றம், நெடுங்கேணி அல்லது வவுனியா காரியாலயத்துடன் (024-222 1354) தொடர்புகொண்டு ஒப் படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தகவல், இ.ஜெயகாந்தன் (6927)

### வகுப்பு ஆரம்பம்

சிறுவர்களுக்கான ஆங்கிலம்பேச, எழுத, வாசிக்க புதிய பிரிவு ஆரம்பம்-21.11.2005 காலை 6.30. ஆசிரியர் இ.றஜித்.

அரச வைத்தியசாலை அருகில், முல்லைத்தீவி. புதுக்குடியிருப்பு.


# 48 கடற்றொழிலாளர்களுக்கு முல்லைத்தீவில் உதவி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 48 கடற்றொழிலாளர்களுக்கு படகும், வெளியிணைப்பு இயந்திரமும், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் நேற்றுக் காலை 10.00 மணிக்கு வழங்கப்பட்டது.

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் இந்த மீன் பிடி உபகரணம் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருவதாகவும், முதற் கட்டமாக 40 படகும் வெளியிணைப்பு இயந்திரமும், இரண்டாம் கட்டமாக 12 படகும் வெளியிணைப்பு இயந்திரமும் வழங்கப்பட்ட நிலையில் மூன்றாம் கட்டமாக, 48 படகும் வெளியிணைப்பு இயந்திரமும் நேற்று முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் அ.மரியராசாவினால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (20)



புதுக்குடியிருப்பில் உள்ள இந்து மயானத்துக்கு உடல்களைக் கொண்டு செல்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் நீர் வழிந்தோடுவதற்கு என வடி வாய்க்கால் வெட்டியுள்ளதால் வீதியிலிருந்து மயானத்திற்கு உட்செல்லும் பாதை இல்லாமல் போனது அன்று முதல் இன்று வரையும் பொது மக்கள் பெரும் அவலத்தையே எதிர்நோக்கியுள்ளனர்.

படம்:-தவரட்ணம்

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு முல்லைத்தீவில் கருத்தமர்வு

(முல்லைத்தீவ)

முல்லை மாவட்ட மாணவர் அமைப்பினரும், சோ.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடனும் குமுழமுனை இளந்தளிர் கல்வி நிறுவனத்தினரால் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பத்திர பரீட்சை நோக்கிய கருத்தமர்வு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் காலை - 9.00 மணிக்கு நெய்தல் கல்வி சேவை நிலைய நிர்வாகி சிவனேசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்துரைகளை சோபா நிறுவன இணைப்பாளர், முல்லைத்தீவு மகாவித்தியாலய உப அதிபர் ஆ.குணநேசன் குமுழமுனை இளந்தளிர் கல்வி நிறுவன நிர்வாகி தயாபரன் முல்லை மாவட்ட மாணவர். அமைப்புபொருப்பாளர் மயூரன் ஆகியோர் வழங்கினார்கள். (20)

# வடிவாய்க்கால் கழிவுப் பொருட்கள் புதுக்குடியிருப்பில் அகற்றல்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பெய்தகனமழை காரணமாக வடிவாய்க்காலில் தேங்கியுள்ள கழிவுப்பொருட்களை அகற்றும் நடவடிக்கையை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் செ.தயானந்தா மேற்கொண்டுள்ளார்.

இந்த வகையில் இந்தத் துறை சார்ந்த ஊழியர்கள் நீர் வடிந்தோடும் வாய்க்கால்களில் தேங்கியுள்ள பொருட்களை அகற்றி வருவதை அவதானிக்கவும் முடிந்தது.




மழைக்காலம் தொடங்கியுள்ளதால் கழிவுப் பொருட்களை நீர் வடிந்தோடும் வடிகால்வாய்களில் போட வேண்டாம் எனப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் மக்களைக் கேட்டுள்ளார்.

இவ்வாறாக கழிவுகளைப் போடுவதால் நீர் வடிந்து ஓட முடியாமல் வீதிகளுக்கு மேலால் செல்வதால் வீதி அரித்துச் செல்வதுடன் மக்கள், போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்படுவதாகவும், அவர் குறிப்பிட்டார். (08)

## திலீபன் மருத்துவ சேவையினர் இன்று குமுழமுனையில் சிகிச்சை

(முல்லைத்தீவு)

குமுழமுனையும் அதனை அண்டிய கிராம மக்களின் நன்மை கருதி தமிழினி சுகாதார சேவையினரின் அனுசரணையுடன் அளம்பில் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் இன்று சிறப்பு மருத்துவ சேவை நடைபெறவுள்ளதாக அளம்பில் தியாக தீபம் திலீபன மருத்துவ சேவை வைத்தியர் அமுதன் தெரிவித்தார்.

குமுழமுனை மகாவித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தச் சிறப்பு மருத்துவ முகாமில் உயர் குருதி அமுக்கம், சலரோகம், வாய்ப்புற்று நோய், ஆகியவற்றுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளது. (20)

## மின்கம்பம் முறிந்து வீழ்ந்தது

(புதுக்குடியிருப்பு)

இலங்கை மின்சார சபையினரால் மின் விநியோகத்துக்கு எனப் போடப்பட்ட மின் கம்பம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

புதுக்குடியிருப்பில் குழந்தை யேசு ஆலய வீதியில் அமைந்துள்ள பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் முன்பாக போடப்பட்ட மின் கம்பமே அண்மையில் பெய்த கனமழையின் போது முறிந்து வீழ்ந்தது. ஆனால் இவ்வாறாக முறிந்து வீழ்ந்த மின் கம்பத்தை இது வரையும் அகற்றவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (08)


# தமிழீழ மாவட்ட நீதிமன்று- கிளிநொச்சி

வ.இல:-364/04/
தன்மை:-பணம்,
பெறுமதி:-500000/=

வழக்காளி
கோவிந்தராசா சிறீஸ்கந்தராசா,
203, கோவில் வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

எதிர்
நல்லையா ஜெயவீரசிங்கம்,
மதுஜா ரேடஸ்,
யாழ்.வீதி,
சாவகச்சேரி
- எதிராளி-

## அறிவித்தல்

மேற் குறித்த எதிராளிக்கு.

மேற்படி வழக்கில், உமக்கான அழைப்புக் கட்டளை பதிவுத் தபால் மூலம் அனுப்பிய பொழுது நீர் அதனைப் பெற்று மன்றின் தோன்றியிருந்தீர். பின்பு மன்றின் தொடர் நடவடிக்கைகளுக்குத் தோன்றி, உமது தரப்பு நியாயங்கள் எதனையும் தெரிவிக்காது தவணைகளுக்கும் தோன்றாது இருந்து வந்துள்ளீர். இதனால் மன்றினால் வழக்காளி ஒரு முகமாக விளக்கப்பட்டு ஒரு முகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது இவ் அறிவித்தலுடன் ஒரு முகத் தீர்ப்பின் பிரதி ஒன்றினை உமது நடவடிக்கைக்கு என இதனால் பகிரங்கப்படுத்துகிறேன். நீர் இவற்றைப் பெற்று 14 நாட்களுக்குள் ஏதும் நடவடிக்கை எடுக்கத் தவறின் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை இதனால் அறியத்தருகின்றேன்.

*இந்த 2005ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 17ஆம் திகதி*

*"மன்றின் கட்டளைப்படி"*

வரைபு.
வழக்காளி சட்டவாளர்
தா.இ.குலசங்கர்
"சட்டத்தரணி"
இரத்தினபுரம் வீதி டிப்போச்சந்தி.
கிளிநொச்சி. (சி.13356)

*செ.மாணிக்கராசா*
*பதிவாளர்*
*தமிழீழ மாவட்ட நீதிமன்று*
*கிளிநொச்சி*



# தமிழீழ மாவட்ட நீதிமன்று- கிளிநொச்சி

வ.இல:-364/04/
தன்மை:-பணம்,
பெறுமதி:-500000/=

வழக்காளி
கோவிந்தராசா சிறிஸ்கந்தராசா,
203, கோவில் வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

எதிர்
நல்லையா ஜெயவீரசிங்கம்,
மதுஜா ரேடஸ்,
யாழ்.வீதி,
சாவகச்சேரி
- எதிராளி-

## இடைக்காலத் தீர்வை

மேற்படி வழக்கானது, செல்வி சாதனா நீதியாளர் அவர்களால் விளக்கத்திற்கென 24.10.2005 அன்றைய நாள் எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, வழக்காளியும், அவரது சட்டவாளரான திரு. தா. இ. குலசங்கர் அவர்களும் தோன்றி இருக்க வழக்காளி ஒரு முகமாக விளக்கப்பட்டார். அதன்படி மன்றினால், 24.10. 2005 அன்றைய நாளே ஒரு முகவிளக்கம் நடாத்தப்பட்டதற்கமைய வழக்காளி தனது உரிமைக்கோரிக்கையில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதி உடையவர் என வெளிப்படுத்தி ஒரு முகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வழக்காளி தனது உரிமைக் கோரிக்கையில் பின்வருமாறு கோரியிருந்தார். 500000/= பணத்தினையும், 500000/= பணத்திற்குச் சட்ட வட்டியையும் எதிராளியின் செயல்களால் வழக்காளிக்கு ஏற்பட்ட இழப்பீடு 200000/= யையும், அத்தோடு எதிராளி நீதிமன்றில் தோன்றும் பட்சத்தில் தகுந்த ஆட்பிணையில் விடவும். இவ் வழக்கில், ஏற்பட்ட வழக்குச் செலவைப் பெறவும், என்று வெளிப்படுத்தியிருந்தார். அதற்கமைய மன்றினால் ஒரு முகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே இடைக்காலத்தீர்வை பதியப்படுகின்றது.

வரை...
வழக்காளி சட்டவாளர்
தா.இ.குலசங்கர்
சட்டத்தரணி
இரத்தினபுரம் வீதி டிப்போச்சந்தி,
கிளிநொச்சி. (சி.3357)

நீதியாளர்.



# துயர் பகிர்கின்றோம்

அமரர் ஆறுமுகம் சதாசிவம் (உடையார்) அவரின் அன்பு மனைவி, பாக்கியம் 18.11.2005 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலம் சென்ற சதாசிவம் (உடையார்) அவரின் அன்பு மனைவியும், காலம் சென்ற ச. நாகேஸ்வரன் (இ.போ.ச) ச.இராமகிருஷ்ணன் (நெதர்லாந்து), க.சத்தியபாமா (நெதர்லாந்து), ச. ஆறுமுகநாதன் (பூநகரி), ச.சைவநாதன் (ஆசிரியர்கொழும்பு) ச.கணேசலிங்கம், (பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், க.கனகராயர் (நெதர்லாந்து) நா.குகனேஸ்வரி (மஸ்கெலியா) இ.திலகராணி (நெதர்லாந்து) ஆ.மகேஸ்வரி (பூ.ப.நோ.கூ) வை.கலாதேவி (கொழும்பு) க.கலமதி, (பூநகரி) இவர்களின் மாமியாரும், பிறபா, சிறி, சுதா, மைதிலி, மாலதி, சுபா, தர்சி, சுதர்சன், நிறைஞ்சன், ராசன், ரகு, ரஜி, நளி, ரஜீவன், கஜன், கதீசா லோகன், அஜந்தா, நிஷாந்தன். ஆகியோரின் பேத்தியாரும், ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 19.11.2005 (சனிக்கிழமை) இன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று பூநகரி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

(6932)

*உறவினர்கள்*
*வாடியடி பூநகரி*

-பிடல் காஸ்ரோவிற்கு இரத்தச் சோகை நோய்-

# அமெரிக்க புலனாய்வு துறையின் கருத்து கியூபா சனாதிபதியால் நிராகரிப்பு

(ஹவனா)

**இரத்தச் சோகை நோயினால் தான் பீடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்த கருத்தை கியூபா சனாதிபதி பிடல் காஸ்ரோ நிராகரித்துள்ளதுடன் தான் உயிருடன் இருப்பதை விரும்பாத அமெரிக்க எதிரிகளின் சதித் திட்டம் இதுவாகும் எனவும் தெரிவித்தார்.**

ஹவானா பல்கலைக்கழக மாணவர்களின் முன் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்தகைய கூற்றுக்களினால் அமெரிக்கர்கள் தன்னைப் படுகொலை செய்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவு சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் சனாதிபதி காஸ்ரோவுக்கு இரத்தச் சோகை நோய் ஏற்பட்டுள்ளது என்றும் அவரது நிலைமை மோசமடைந்து வருவதனால் நாளாந்தக் கடமைகளைப் பூர்த்தி செய்வதில் அவர் கஸ்ரங்களை எதிர்நோக்கி வருகின்றார் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த நோய் தீவிரமடைந்துள்ளது என்றும் கியூபாவின் எதிர்காலம் சம்பந்தமாக அமெரிக்க கவலை கொண்டுள்ளது என்றும் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

1959 ஆம் ஆண்டு புரட்சி ஒன்றின் மூலம் அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர் சனாதிபதி காஸ்ரோவை படுகொலை செய்வதற்கு அமெரிக்க மத்திய உளவறியும் பிரிவு பல தடவைகள் முயற்சி மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.




உலகில் பறவைக்காய்ச்சல் நோய் பரவி வருவதை அடுத்து பெருமளவான பறவைகள் அழிக்கப்பட்டு வருவதைக் கண்டித்து சிங்கப்பூரில் உள்ள விலங்குகள் பாதுகாப்பு அமைப்பினர் வித்தியாசமான பிரச்சாரமொன்றில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# பூகம்பம் தாக்கிய பகுதிகளை பாகிஸ்தானில் கொபி அனான் பார்வையிட்டார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் பூகம்பம் தாக்கிய பகுதிகளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் பார்வையிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை நேரில் பார்வையிடுவதற்காக நேற்று அங்கு சென்றார்.

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்புடன் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்ட கொபி அனான் தடுப்பு மருந்துகளை வழங்கும் வைத்தியர்களையும் சந்தித்தார்.

இதேவேளை நிவாரணப் பணிகள் தொடர்பாக பாகிஸ்தான் படைத்தளபதி ஒருவர் கொபி அனானிடம் விளக்கியுள்ளார்.

பாகிஸ்தானில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவியாகத் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# பாராளுமன்ற பதிவேட்டில் மனைவியின் வருமான விபரம்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரின் மனைவியின் வருமானம் தொடர்பாக பிரிட்டிஷ் பாராளுமன்ற பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் மனைவியான செரிபிளேயர் ஒரு வழக்கறிஞராவார். இந்தத் தொழிலில் அவருக்கு பெரும் தொகை வருமானம் வருகிறது. இது தவிர புத்தகம் எழுதுதல், உரை நிகழ்த்துதல் வாயிலாகவும் அவர் சம்பாதிக்கிறார். இந்தத் தகவலை பிரதமர் ரொனி பிளேயர் பிரிட்டிஷ் பாராளுமன்ற பதிவுப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருப்பவர்கள் தங்களது வருமான விபரங்களை தெரிவிக்க வேண்டும் ஆனால் குடும்ப உறுப்பினர்களின் வருமானத்தை குறிப்பிட வேண்டும் என்று சட்டமில்லை. இருந்த போதிலும் ரொனிபிளேயர் தனது மனைவியின் வருமானத்தை பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளார். இது தவிர அவர்களுக்கு சொந்தமாக இரண்டு வீடுகள் உள்ளது. அதிலிருந்து வாடகை வருவதாகவும் ரொனிபிளேயர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிய பசுபிக் மாநாட்டை எதிர்த்து தென்கொரியாவில் ஆர்ப்பாட்டம்

தென் கொரியாவில் ஆசிய பசுபிக் கூட்டு ஒத்துழைப்பு மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக் கணக்கான தொழிற் சங்க ஊழியர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தி யுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சிற்கும், தற்பொழுது நடைபெற்று வரும் மாநாட்டிற்கும்,எதிர்ப்புத் தெரிவிக்கும் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

தொழிற்சங்க ஊழியர்கள் அனைவரும் நன்மையடையக் கூடிய வகையில் புதிய கொள்கைகளை முன் வைக்க வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்கா, சீனா, யப்பான், ரஷ்யா ஆகிய நாடுகள் உட்பட ஆசிய பசுபிக் வலய நாடுகளின் 21 தலைவர்கள் கலந்து கொள்ளும் இம் மாநாட்டில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் நோய் குறித்தும் சுற்றுலாத் துறை குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



பேர்லினில் நேற்று பேச்சுவார்த்தைக்கு வருகை தந்த ஜேர்மன் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சித் தலைவியை துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் வரவேற்கின்றார்.

# ஈராக்கிலிருந்து படைகளை விலக்க வேண்டும் அமெரிக்க பாராளுமன்றத்தில் கோரிக்கை

(வோஷிங்டன்)

ஈராக்கில் இருந்து படைகளை திரும்பப் பெற வேண்டும் என்று அமெரிக்க பாராளுமன்றத்தில் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நேற்று இக் கோரிக்கையை முன் வைத்தன.

ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டு சதாம் ஹுசைன் ஆட்சியை அகற்றிய அமெரிக்க கூட்டுப்படைகள் அங்கேயே நிலை கொண்டுள்ளன.

இதனால் ஈராக்கில் உள்ள கூட்டுப் படைகள் மீது தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றமை தெரிந்ததே.

# அமெரிக்க கொள்கைக்கு எதிராக கிரேக்கத்தில் ஆர்ப்பாட்டம்

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகள் மீதான அமெரிக்காவின் கொள்கையை கண்டித்து கிரேக்கத்தில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு கிரேக்கத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

அதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதேவேளை ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என்ற கோரிகை வலுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# சிலி–பொலிவியாவில் நிலநடுக்கம்

(சாண்டியாகோ)

சிலி நாட்டிலும் அதனை அண்டியுள்ள பொலிவியாவிலும் நேற்று பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

சிலி நாட்டின் வடக்குப் பகுதியில் நேற்று அதிகாலை 4.00 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் ஆறு புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

போர்கோபில்லா உட்பட பல்வேறு பகுதிகளில் இந்த நில நடுக்கம் உணரப்பட்டது. வீடுகள் மற்றும் இதர கட்டடங்கள் அதிர்ந்தன. வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் அங்கிருந்து வெளியே ஓடினார்கள்.

சிலி நாட்டை அண்டியுள்ள பொலிவியாவிலும் நில நடுக்கம் ஏற்பட்டது.

இங்கு 6.9 ரிச்டர் அளவில் நில நடுக்கம் பதிவானதாக அங்குள்ள புவியியல் துறை அறிவித்துள்ளது. கட்டடங்கள் அதிர்ந்தன. சில கட்டடங்களில் பிளவுகள் ஏற்பட்டது.

ஆனால் இதுவரை உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக தகவல் இல்லை. பொது மக்கள் வீடுகளுக்குள் செல்லாமல் திறந்த வெளியிலேயே திரண்டுள்ளனர்.

சிலி நாட்டின் வடபகுதியில் உள்ள சில சுரங்கங்கள் பூகம்பத்தில் பாதிக்கப்பட்டன. ஆனால் சுரங்கத் தொழில் பாதிக்கப் படவில்லை என்று அமெரிக்காவை சேர்ந்த சுரங்க அதிபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



டெல் அவிவ்வில் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனை சந்தித்த பின்பு பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிக்கும் புதிய தொழிற்கட்சித் தலைவர் அமிர்பெரட்ஸ்

# வீதி ஒழுங்கு முறை பற்றிய செயலமர்வும் ,செயற்பாட்டுப்பயிற்சியும்

[அலுவலகசெய்தியாளர்]

**கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய மாணவமாணவிகளுக்கான வீதி ஒழுங்கு வீதிமுறை மற்றும் செயற்பாட்டு முறைகள் சம்பந்தமான செயலமர்வும் செயற்பாட்டுப்பயிற்சியும் நேற்று முன்தினம் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.**

தமிழீழ காவல்துறையின் நகர போக்குவரத்து பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி செயலமர்வில் தமிழீழ காவல்துறை நகர போக்குவரத்து பிரிவு காவல்துறை உறுப்பினர்களும் கலந்து கொண்டு பாடசாலை ஆரம்பமாகும் நேரமும், பாடசாலை முடிவடையும்நேரமும் பாடசாலையின் நுழைவாயிலிற்கு முன்பாக பிரதான வீதியில் மாணவர்களை வீதிகளைக் கடப்பது தொடர்பாக ஒழுங்குபடுத்துதல் மற்றும் அந்த நேரங்களில் வீதியில் பயணிக்கும் வாகனங்களை சைகைமூலம் கட்டுப்படுத்தி விபத்துக்கள் ஏற்படாதவாறு மாணவர்களை காப்பாற்றுவது தொடர்பாகவும் பணிகளை மேற்கொள்ளும் வகையில் செயன்முறைப்பயிற்சியும் வழங்கப்பட்டது.

மேற்படி பயிற்சி நிகழ்வில் 35 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இது போன்ற செயலமர்வுகள் வன்னிப்பெருநிலப்பரப்பிலுள்ள சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளதென தமிழீழகாவல்துறை நகரபோக்குவரத்துப் பிரிவுப்பொறுப்பாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)



(படம்-சோதி)

# சிறுகைத்தொழில் பயிற்சிப்பாசறை நிறைவு

(கிளிநொச்சி)

கியூடெக் கரித்தாஸ் வன்னி நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை பீற்றர் அடிகளாரின் நெறிப்படுத்தலோடும் ஊக்குவிப்புக் குழுவிலே இணைந்து செயற்படும் உறுப்பினர்களுக்கு ஆறுநாள் சிறுகைத்தொழில் மேம்பாட் டுப் பயிற்சிப் பாசறை கிளிநொச்சி கியூடெக் ஸ்தாபன கேட்போர் கூடத் திலே நடைபெற்றது.

இப்பயிற்சிப்பாசறையின் விரிவுரைகளை கைத்தொழில் அபிவிருத்தித்திணைக்கள விரிவுரையாளர்களான கங்காதரன், ம.கணேசலிங்கம், ஆர். முகுந்தன், கரித்தாஸ் செடக் சிறிலங்கா ஸ்தாபன விழிப்புணவுப் பயிற்சி இணைப்பாளர் சியோன் ஆகியோர் விரிவாக எடுத்துரைத்தார்கள். மேற்படி பாசறையின் பயிற்சியாளர்களாக ஊககுவிப்புக்குழுக்களின் 25 உறுப்பினர்கள் இணைந்து பயன் பெற்றார்கள். இறுதி நாளான சனிக்கிழமை பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் இணைந்து கொண்ட உறுப்பினர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றதைத் தொடர்ந்து இணைப்பாளர் செல்வி.நேசநந்தினியின் நன்றியுரையுடன் பாசறை நிகழ்வுகள் நிறைவுபெற்றன.





# த.தே தொலைக்காட்சி தொடர்பகம் திறப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளை பொன்நகர் கிராமத்தில் தமிழீழ தேசிய தொலைக்காட்சி தொடர்பகம் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# கண்டெடுப்பு

காத்தான் நல்லதம்பி தே.அ. அட்டை (இல 392382275V) மாவிட்ட புரம், சாமுவேல் இரஞ்சித மலர். தே.அ.அட்டை இல 426105439V சுன்னாகம், திருமதி. ஆர்.நல்லதம்பி சுகா தாரத் திணைக்களம், யாழ்ப்பாணம் தொழில் அடையாள அட்டை இல 213 என்பன கிளிநொச்சி நகர தபால் பெட்டி ஒன்றிலிருந்து தபால் சேவக ரினால் கண்டெடுக்கப்பட்டு கிளி நொச்சி ஈழநாதம் விளம்பரப்பணி மனையில ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரித்துடை யவர்கள அலுவலக நேரத்தில் வருகைதந்து பெற்றுக்கொள் ளும்படி வேண்டப் படுகின்றனர். (சோ)

# சூழல் பாதுகாப்பு வாரம் கரைச்சிப்பிரதேச சபையினரால் முன்னெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நல்லாட்சி ஆணையத்தின் பிரகடனத்திற்கமைவாக கரைச்சிப்பிரதேச சபையினரால் கடந்த 14 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரையும் சூழல் பாதுகாப்பு வாரமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக நகரப்பகுதிகளிலும், கிராமப்பகுதிகளிலும் திண்மக்கழிவுகளை அகற்றி சுத்தம் பேணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. நகரை அண்டிய கிராமங்களில் சேதனப்பொருட்களை வளவுகளுக்குள்ளேயே புதைக்குமாறும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களை நீலப் பைகளில் சேகரித்து வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந் நலப்பைகளில் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களை பிரதேச சபை பொறுப்பேற்கும் எனவும், பொது மக்கள் தங்கள் வளவுகளுக்கு முன்பாகவுள்ள கழிவு வாய்க்கால்களையும் சுத்தம் செய்துகொள்ளுமாறும் கரைச்சிபிரதேச விசேட ஆணையர் பொன். நித்தியானந்தம் கேட்டுக் கொண்டுள்ளார்.

மற்றும் தங்கள் பிரதேசங்களில் மரநடுகைத்திட்டங்களையும் மேற் கொண்டு அழகினைப்பேணுமாறு வேண்டியுள்ளதுடன் பொதுமக்கள் கழிவு அகற்றும் செயற்பாடுகளில் ஏதும் தேவைகள் ஏற்படின் பிரதேச சபையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார். (சோ)

# மழைக்காலத் தொற்றுநோய்களிலிருந்து விடுபடல்; வாய்ப்புற்றுநோயை இனங்காணல் கருத்தூட்டல்

(மன்னார்)

மன்னார் மாவட்ட திலீபன் மருத்துவ சேவையினருடன் இணைந்து தமிழீழ சுகாதாரசேவையினர் மழைக்கால தொற்று நோய்களில் இருந்து விடுபடல் தொடர்பாகவும், வாய்ப்புற்றுநோயினை முன்கூட்டியே இனம் காணல் தொடர்பாகவும் தொடர்கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக கடந்த பத்தாம் திகதி சின்னவலையன்கட்டு அ.த.க. பாடசாலையிலும், 15ஆம் திகதி கறுக்காய்க்குளம் மாதர்சங்கத்தினை ஒன்று கூட்டி விளக்கமளிக்கப்பட்டதுடன், வாய்ப்புற்றுநோயினை இனம் காணுவதற்கான சிகிச்சையும் நடாத்தப்பட்டது.

# விதைதானியம் வழங்கல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட துணுக்காய் கல்விளான் பகுதிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் 140 சிறந்த விவசாய பயனாளிக் குடும்பங்களுக்கு விதை தானியங்கள் வழங்கிய நிகழ்வு கடந்த செவ்வாய் பி.ப மூன்று மணிக்கு சர்வ தேச செஞ்சிலுவைச்சங்க வன்னிப் பிராந்திய வெளிக்கள உத்தியோகத்தர் அ.துளசிநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது மேற்படி கிராமங்களில் வாழும் விவசாயிகளை ஊக்குவித்து பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்விளான் பகுதியில் 90 குடும்பங்களுக்கும், துணுக்காய்பகுதியில் 50 குடும்பங்களுக்கும் உளுந்து, பயறு,கௌபி போன்ற விதைதானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிகழ்வில் துணுக்காய் கிராமசேவையாளர் வ.ப.சண்முகநாதன், கிராம விவசாயிகள் பொது அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# துணுக்காய்பிரதேசத்தில் மாவீரர் நாள் நினைவு நிகழ்வு







(மல்லாவி)

முல்லை.மாவட்ட துணுக்காய் பிரதேசத்தில் மாவீரர் நாள் நினைவு நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக மு/யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த புதன் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்றது.

மல்லாவி நுண்கலைக்கல்லூரி அதிபரும், யோகபுரம் மகாவித்தியாலய ஆசிரியருமான சி.சிவசத்தியமோகன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மையாக பொதுச்சுடரினை துணுக்காய் பிரதேச உதவி அரசாங்க அதிபர் நா.நந்தகுமார் ஏற்றி வைக்க, முதல் மாவீரன் லெப். சங்கரின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடர்களை மல்லாவி வர்த்தக சங்கச் செயலாளர் ந.தனுராஜ். மல்லாவிப் பிரதேச கலைக்குழுத் தலைவர் மா.இராசகுலசிங்கம் ஆகியோர் ஏற்ற, திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை மாவீரர் கேதாரசியின் தாயார் அணிவித்தார்.

தொடர்ந்து மலர்வணக்கம், அகவணக்கம் இடம்பெற்றன. இந் நிகழ்வின் அரங்க நிகழ்வில் வரவேற்புரையை மல்லாவிப் பிரதேச மாதர்சங்கத்தலைவி திருமதி விஜயலட்சுமி நிகழ்த்த, வரவேற்பு நடனத்தை மல்லாவி நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் நிகழ்த்தினர். தொடர்ந்து கருத்துரைகளை துணுக்காய் பிரதேச உதவி அரசாங்க அதிபர் நா.நந்தகுமார், யோகபுரம் ம.வி முதல்வர் திருமதி க.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் வழங்க, சிறப்புரையை முல்லை.மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பிரிவுத்துணைப்பொறுப்பாளர் நெடுமாறன் வழங்கினார்.

இந்நிகழ்வில் சோதியாப்படையணிப் போராளிகளின் மாவீரர் நடனம் உட்பட பல நிகழ்வுகள் இடம்பெற்றன. (24)

# சமகால அரசியல் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

சமகால அரசியல் சூழ்நிலைகள் தொடர்பான கருத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமையன்று கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் அருள் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு சமகால அரசியல் சூழ் நிலை தொடர்பான கருத்துரைகளை வழங்கினார்.

மேற்படி நிகழ்வில் அரசறிவியற் கல்லூரியைச் சேர்ந்த புலிமறவன், கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் மற்றும் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர்கள், தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள் எனப் பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சூரிய மின்கலம் வழங்கல்

(முள்ளியவளை)

முள்ளியவளை பொன்னகர் கிராமத்தில் கடந்த புதனன்று சூரிய மின்கலம் பொருத்தப்பட்டு மாலை நேர வகுப்பும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்மூலம் 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

# கூலி வழங்கக்கோரிக்கை

(மன்னார்)

மன்னார்மாவட்டத்திலுள்ள வலயன்கட்டு , பரிசன்குளம், விளாத்திக்குளம் ஆகிய கிராமங்களில் இவ்வாண்டு ஆடிமாதம் உலக உணவுத்திட்டவேலை நடைபெற்றது.

பரிசன்குளத்தில் வேலைசெய்த 4000 கூலியும் விளாத்திகுளத்தில் வேலைசெய்த 2250 கூலியும் இன்று வரை வழங்கப்படவில்லை. இதனால் மீதி வேலை செய்யப்படவில்லை. இதனால் கிராமவேலையும் பாதிப்பு அடைந்துள்ளதோடு செய்த வேலைக்கும் கூலி வழங்கப்படவில்லை என்று அக்கிராம மக்கள் கவலையடைந்துள்ளனர். (40)

# பொதுச்சொத்துக்களை அதிகம் பயன்படுத்தியது ஆளும் கட்சியே-ட்ரான்ஸ் பரன்சி நிறுவனம்

**(கொழும்பு)**

**'சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் ஆளும் கட்சிதான் பொதுச் சொத்துக் களை அதிகம் பயன்படுத்தியதாக ட்ரான்ஸ் பரன்ஸி இன்டர்நஷனல் சிறிலங்கா நிறுவனம் தனது விசாரணை அறிக்கையை வெளியிட்டுள்ளது. பொதுச் சொத்துக்கள் ஆளும் கட்சியினரின் வசமிருப்பதால் அவர்களே அதிகம் அதனைப் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தொலை பேசி, மின்சாரம், வாடகை போன்றன செலுத்தப்பட்டு வந்துள்ளதுடன் இந்தக் காலப்பகுதியில் அவரின் உத்தியோகபூர்வ இல்லம் செய்தியாளர் மாநாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை பொதுச் சொத்துக்களை தேர்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்தியமை குறைவடைந்துள்ளதாகவும் அந்த நிறுவன அறிக்கை தெரிவிக் கிறது.

பொதுச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டாலும் அதுகுறித்து தகவல்கள் வெளிவராமல் மறைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் தேர்தல்களின் பொதுச்சொத்துக்களை பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அந்த நிறுவனம் உரிய தரப்பினரைக் கேட்டுள்ளது.



*தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு புளியங்குளத்தில் பொதுஇடங்களிலும் மாவீரர்நினைவு மண்டபப் பகுதிகளிலும் சிரமதானப்பணியில் ஈடுபட்டுவரும் ஆயப்பகுதி பணியாளர்களைபடத்தில்காணலாம். (படம்:-சசி)*

## வட்டுவாகல் விபத்தில் ஒருவர் காயம்

வட்டுவாகல் பகுதியில் ஏற்பட்ட உழவு இயந்திரம்-துவிச்சக்கர வண்டி விபத்தின்போது ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உழவு இயந்திர சாரதி உழவு இயந்திரத்துடன் தலைமறைவாகி இருந்தார். தற்போது தீவிர தேடுதலின் பின்னர் முல்லை காவல்பணிமனையினரால் குறித்த உழவு இயந்திரத்தின் சாரதியை கைதுசெய்துள்ளனர். உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டு தொடர் விசா ரணை மேற்கொண்டு வருகின்றனர். (20.18)

## மாமனிதர் ஊடகவியலாளர் சிவராம் கொலை; விசாரணை இன்னும் தொடருகின்றது

### -குற்றப்பிரிவு பொலிசார் நீதிமன்றில் தெரிவிப்பு

ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் படுகொலை தொடர்பான விசாரணையை இன்னமும் தொடருவதாக கொழும்பு குற்றப்பிரிவுப் பொலிசார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சிவராம் கொலை தொடர்பாக 125 பேரிடம் விசாரணை நடத்தியுள்ளதாகவும், விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கடுவெல தலைமை நீதிபதி சாம்ப ஜானகி ராஜரட்னவிடம் குற்றப்பிரிவுப் பொலிசார் கூறினர்.

முன்னதாக கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகப் பறிமுதல் செய்யப்பட்ட புளொட் சித்தார்த்தனின் வாகனத்தை விடுவிக்கும் மனுவைச் சட்டத்தரணிகள் தாக்கல் செய்தனர். சிவராம் கொலையையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட இந்த வாகனம் ரூபா. 50 இலட்சம் பிணையில் பின்னர் விடுவிக்கப்பட்டது.

சிவராம்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சிறிஸ்கந்தராஜா என்ற பீற்றர் நாளை வரை நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டி பொலிஸ்நிலையத்திற்கு எதிராக அடையாளம் தெரியாத குழுவினரால் கடந்த ஏப்ரல் 28 ஆம் நாள் கடத்திச் செல்லப்பட்ட சிவராம் படுகொலை செய்யப்பட்டார்.

## கருத்தரங்கு

(புதுக்குடியிருப்பு)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுசரணையுடன் முல்லைத்தீவு அரச செயலகத்தால், முல்லை கல்விவலயத்துக்குட்பட்டபாடசாலைகளின் சுற்றாடல் முன்னோடிக் குழுக்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான சுற்றாடல் தொடர்பான முக்கிய கருத்தரங்கு கடந்த 15 ஆம்திகதி காலை புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மண்டபத்தில் பிரதேச சுற்றாடல் உத்தியோகஸ்தர் இ.கருனைவேல் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

இங்கு பல உயரதிகாரிகளும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வழங்கினார்கள். (08)



*மாவீரர் தினத்தினை முன்னிட்டு தமிழீழ காவல்துறை சீர்திருத்தப்பிரிவினரின் ஏற்பாட்டில் சிரமதானப்பணிகள் இடம் பெற்றுவருகின்றன. நேற்று முன்தினம் திருநகர் கிராமத்தில் சிரமதானப் பணி மூலம் வீதியோரங்கள் துப்புரவு செய்யப்படுவதனைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)*

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு விளக்கம் கேட்கிறது மனித உரிமை ஆணையம்

ஐக்கிய தேசியக்கட்சியின் ரணில்விக்கிரமசிங்கவின் பரப்புரைக்கூட்டத்திற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைத் தெரிவிக்குமாறு சிறிலங்காப் பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்னாண்டோவுக்கு மனித உரிமைகள் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

சிறிலங்கா மனித உரிமைகள் ஆணையத்தின் கண்டி பிரதேச ஒருங்கிணைப்பாளர் விரஞ்சன் டயஸ் சுமன சேகர இது தொடர்பில் எழுதியுள்ள கடிதத்தில் ஊடகவியலாளர்களின் முறைப்பாடு மீது பாரபட்சமற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அது தொடர்பில் தமக்கு விபரங்களை அனுப்பிவைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரி ஆனந்தஅல்விஸ் என்பவரால் கடந்த நவம்பர் ஆறாம் நாள் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட இந்த அதிகாரிமீது மேலும் ஆறு முறைப்பாடுகள் பதிவாகி இருப்பதாகவும் மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

## முகமாலை கொத்தணி வாக்குச்சாவடிகளுக்கு 42 இல.ரூபா செலவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகமாலையில் கொத்தணி வாக்குச்சாவடியை அமைப்பதற்குத் தேர்தல் திணைக்களத்திற்கு 42 இலட்சம்ரூபா செலவாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் இங்கு ஒரேயொரு வாக்கு மட்டுமே செலுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் யாழ்.மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகளுக்கு ஒருகோடியே 70 இலட்சம் ரூபா செலவிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.(33)

## மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க கோப்பாய் பிரதேச மக்கள் தயார்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை தமிழீழத்தாயகப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்படும் மாவீரர்தின எழுச்சி நாளுக்கான ஆரம்பக்கட்ட வேலைகளில் கோப்பாய் பிரதேச மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

மாவீரர் எழுச்சிநாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கும் பொருட்டு முதற்கட்டமாக கோப்பாய்மாவீரர் துயிலுமில்லமும் அதனை அண்மித்த பிரதேசங்களும் சிரமதானம் செய்யப்பட்டு வருவதோடு வீதிகள் சந்திகள் தோறும் சிவப்பு மஞ்சள் கொடிகள் மற்றும் பதாகைகள் என்பன கட்டப்பட்டு எழுச் சிக்கோலம் பூண்டுள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது. (கீ)

## விசுவமடு சந்தைப்பகுதியில் இலையான் பெருக்கம் அதிகரிப்பு

விசுவமடு-தருமபுரம் முரசுமோட்டை ஆகிய பொதுச் சந்தைகளில் இலையான் பெருக்கத்தினால் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சந்தைக் கழிவுகளினால் சந்தைகளில் இலையான் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. மீன்களின் மேல் இளையான்கள் குவிந்து காணப்படுவதுடன் இதேபோன்று மரக்கறிகளிலும் இலையான்கள் குவிந்து காணப்படுகிறது.

கடைகளில் இருக்கும் பொருட்களிலும் இலையான் பெருக்கம் காணப்படுகிறது. இதனால் பல தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் மக்கள் அருவருப்போடு சந்தைகளின் நுகர்வுப் பொருட்களை வாங்குவதையும் காணமுடிகிறது.

சந்தை உட்புறத்தில் மாடு,ஆடு,நாய் போன்ற கால்நடைகளால் அசுத்தப்படுத்தப்பட்டு விடுவதையும் சந்தைகளில் பட்டியாக மாடுகள், ஆடுகள் நிற்பதையும் இதன் கழிவுகளால் மேலும் இலையான்கள் பெருக்கமடைவதுடன் சந்தைக்கழிவுகளை அகற்றாமல் சந்தைகளில் குவிந்து காணப்படுவதால் துர்நாற்றமும் வீசுகின்றது. மழைக் காலம் ஆகையால் சந்தையில் சுத்தமில்லாமல் விற்பனை யாகும் பொருட்களினால் பல தொற்று நோய்கள் பரவும் என பலராலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் தொடர்புடையவர்கள்குறிப்பிட்ட சந்தைகளைப் பார்வையிட்டு மக்களின் சுகாதாரத்தைப் பேண வேண்டும் என மக்கள் நலன் விரும்பிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கண்காணிப்புக்குழுத்தலைவர் இளந்திரையன் சந்திப்பு

மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் அவர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட புதிய கண்காணிப்புக் குழுத்தலைவர் லெய்வ்வின்சன் ஆகியோருக் கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் 10.00 மணிக்கு கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் இடம் பெற்றது. இச் சந்திப்பானது புதிய கண்காணிப்புக்குழுத் தலைவருடன் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவது தொடர்பான சிநேக பூர்வமான சந்திப்பாகவே இடம் பெற்றது.



# தக்காளி ,தோடம்பழம்

ஆண்கள் சிறுவயதில் இருந்தே சாப்பிட்டு வர வேண்டிய அரிய பழங்களுள் தக்காளிப்பழமும் ஒன்றாகும். மிகமுக்கியமான இந்தப் பழத்திலுள்ள லைகோபென்தான் இவர்களின் வாழ்நாளை நீடித்துத் தருகிறது.

தக்காளியில் உள்ள மிகச் சிறந்த சிவப்புப் பொருளான லைகோபென், பிராஸ்டேட் சுரப்பியில் உருவாகும் புற்றுநோயையும் இதய நோய்களையும் மிகுந்த ஆற்றலுடன் குணப்படுத்துகிறது. தக்காளியில் உள்ள ப்ரோசயனிட்ஸ் என்னும் கசப்புப்பொருள்தான் இரத்தக்குழாய் களின் சுவர்களைப் பலப்படுத்து கிறது.


பீட்யூட்ரி சுரப்பி சிறப்பாக வேலை செய்தால்தான் எந்த வயதிலும் அறிவுத்தெளிவுடன் வாழ முடியும். அதற்கு தக்காளியில் அதிகம் உள்ள விற்றமின் சி உதவுகிறது. பருமனைக் குறைப்பதுடன் முதுமையையும் தக்காளியில் உள்ள விற்றமின் சி குறைக்கிறது. வளர்சிதை மாற்றத்தை விரைவாகச் செய்வதால்தான் இளமை காக்கப் படுகிறது. வயதாக வயதாகப் பலவீனமும் சோர்வும் ஏற்படாமல் வாழ, தக்காளியில் உள்ள விற்றமின் ஈ உதவுகிறது. புற்றுநோய் எந்த இடத்திலும் வராமல் பார்த்துக்கொள்கிறது விற்றமின் ஈ.

தக்காளியை பச்சடி, பேஸ்ட், கெச்சப் என்று பயன்படுத்தினால் பத்து மடங்கு அதிகமாக லைகோ பென் கிடைக்கிறதாம். தக்காளிப் பழங்களைக் கசக்கிப் பிழியும்போது அரைக்கும் போதும் தக்காளியின் திசுச்சுவர்கள் உடைந்துவிடுவதால் லைகோபென்னை உடல் எளிதாக உறிஞ்சிக் கொள்கிறதாம் எனவே பழுத்த நான்கு தக்காளிகளை மிக்சியில் சாறாகத் தயாரித்து அருந்தி வந்தால் லை கோபென் நன்கு கிடைக்கும். தக்காளிப் பழங்களைக் கடித்தும் சாப்பிடலாம்.

பெண்களுக்கான அரிய பழம்.

பெண்களுக்கு தினசரி கடுமையான வேலை வீட்டிலும், வேலை பார்க்கும் இடத்திலும் இருக் கலாம். எனவே இவர்கள் மனதையும் உடலையும் காப்பாற்றி ஆரோக்கியமாகப் பராமரிக்க தினமும் தோடம் பழச் சாறு இரண்டு முறை அருந்தி வரவும் எலும்பு மெலிவு வராமல் இருக்க கல்சியம் அதிகம் உள்ள பால், ராகி சாப்பிடுகிறவர்கள் உள்ளனர். ஆனால் இருதய அடைப்பு பெருங்குடல், மார்பகம் உட்பட உடலின் எந்தப் பகுதியிலும் புற்றுநோய் வராமல்தடுக்க, மூன்று சிறந்த கசப்புப் பொருள்கள் தோடம் பழத்தில் உள்ளன. தோடம்பழத்தில் உள்ள விற்றமின் சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் மனதில் தன்னம்பிக்கையையும் உற்பத்தி செய்கிறது. இதை உணர்ந்து தோடம் பழச்சாறு தினமும் அருந்த வேண்டும். கர்ப்பம் உண்டாக்கும் வாய்ப்பை தோடம்பழம் உருவாக்குகிறது. குழந்தை இல்லாத தம்பதிகள் தினமும் தோடம்பழம் சாப்பிடுவது நல்லது நெஞ்செரிச்சலைத் தடுத்துக் குணப் படுத்துவதுடன் ஆஸ்துமா மூச்சிறைப்பு போன்றவை வராமலும் தடுக்கிறது. சாறாக அருந்தும் போது மூன்று மடங்கு அதிகமாக சத்துக் கிடைப்பதால் தோடம்பழச் சாறை அடிக்கடி அருந்தவும்.

# சுனாமி எச்சரிக்கைக் கருவி






1. கடற்பரப்பில் வைக்கப்பட்டுள்ள கடலின் செயற்பாட்டையும் வித்தியாசமான நீரின் அழுக்கத்தையும்15 செக்கன்களுக்கொரு முறை அறிவிக்கும் கருவி

2. கடற்பரப்புக்கு மேல் மிதந்து கொண்டிருக்கும் மிதவை இது. கடலடித்தளத்திலுள்ள மாற்றங்கள்பற்றிய தகவலை செய்மதிக்கு அனுப்பும்

3. தகவலை பெற்று கரைக்கு அனுப்பும் செய்மதி

இந்தோனேசியா ஜேர்மன் அரசுகள் கூட்டாக இணைந்து சுனாமி எச்சரிக்கைக் கருவி யொன்றை இந்தோனேசியக் கடற்கரையில் நிர்மாணித் துள்ளன.

சுமார் எட்டு மாதகாலமாக நிர்மாணிக்கப்பட்டு வந்த இக்கருவி தற்போது செயற்படும் நிலையிலுயுள்ளது. முற்றுமுழுதாக நீரில் மிதக் கவிடப் பட் டுள் ள இக்கருவியிலிருந்து 22அடி உயரமான கோபுரம் காணப்படுகிறது. இக்கோபுரம் பல அறைகளை கொண்டிருப்பதுடன் பல மின்சாதனங்களும் பொருத் தப்பட்டுள்ளன. இக்கருவிகள் கடற்படுகையுடன் தொடர்பு கொண்டிருப்பதுடன் ஏதாவது அனர்த்தம் அல்லது வித்தியாசமான மாற்றம் ஏற்பட்டால் உடன் மேற்தளத்துக்கு சமிக்ஞைகளை அறிவிக்கும். இந்த சமிக்ஞைகள் செய்மதி மூலம் தரைப்பகுதிக்கு அனுப்பப்படும் இந்த சமிக்ஞைகள் சரியான வழியில் பெருநிலப்பரப்பை அடைந் தால் அதுவெற்றிகரமானதாக இருக்கும். அதன்மூலம் கரையிலிருக்கும் அதிகாரிகள் மக்களுக்கு தகவல் வழங்குவர் அதன் மூலம் பாரிய உயிரிழப்புக் களையும் பொருட் சேதத்தையும் தவிர்க்கலாம் எனக் கூறப்படுகிறது.

# புகைப்பதால் இரத்தக்குழாய்கள் பாதிப்பு

புகைப்பிடிப்பதால் இரத்தக் குழாய்களின் சுருங்கி விரியும் தன்மை பாதிக்கப்படுகிறது. இதற்கு எண்டோத்திலியல் டிஸ்பங்ஷன் (Endothelial dysfunction)என்று பெயர். இதனால் இரத்த ஓட்டத்தில் ஏற்படும் மாற்றத்துக்கு தகுந்தாற் போல செயற்படும் தன்மையை இரத்தக் குழாய்கள் இழந்து விடுகின்றன. விளைவு இரத்த நாளங்கள் தடினமாகி (Atherosclerosis) மாரடைப்பு அல்லது பக்கவாதம் உண்டாகும். இந்நிலையில் புகைப் பவர்களின் இரத்த நாளங்கள் பாதிக்கப்படுவதை சொக்லேட் தடுத்து நிறுத்தும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அதற்காக சொக்லேட் சாப் சாபிட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று நினைக்க வேண்டாம். ஏனெனில் இது ஒரு தற்காலிக தீர்வு மட்டுமே சொக் லேட்டில் உள்ள ப்ளேவ்னோல் (flavonol)என்ற நோய் எதிர்ப்புப் பொருள் எண் டோத்திலியல் டிஸ்பங்ஷனை தற்காலிகமாக சரி செய்கிறது.

# பொது அறிவு

ரஷ்யாவில் கவுகா பகுதியில் தீப்பெட்டிகள் கண்காட்சி ஒன்றுள்ளது. இதில் 19 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தீப்பெட்டி உருவான நாளிலிருந்து. இன்று வரையிலான பல நாட்டுப் பலரகத் தீப்பெட்டிகள் இடம்பெற்றுள்ளன.

வானொலி அலைகள் ஒரு வினாடிக்கு இரண்டு இலட்சத்து 97ஆயிரத்து 600 கி.மீ தூரம் செல்லும்.

ஆங்கில மொழியில் மிக அதிகமான எழுத்துக்களுடைய சொல் இதுதான் Pneumonoultramicroscopicsilicovolcamocoiosis இச் சொல்சேம்பர் அகராதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆங்கிலச் சொல்லுக்கு தமிழில் தூசி இழுப்பு நோய் எனப் பொருள்படும்.

மனித உடலில் உள்ள எலும்புகளனைத்தும் ஒன்பது கிலோ கிராம்கள் இருக்கும்.

உலகிலேயே மிகப் பெரிய ரயில் நிலையம் நியூயோர்க்கிலுள்ள Grand Central Railway Terminus Station இதில் 47 பிளாட்பாரங்களுள்ளன.

தமிழகச் சட்டப் பேரவை விதிகள் மொத்தம் 232 ஆகும். இவைகளை மனப்பாடமாக வைத்திருந்தவர் திரு.சி.பா ஆதித்தனார்.

குறுகிய காலத்தில் 60 இலட்சம் யூதர்களை 1944 ஆம் ஆண்டு ஹிட்லர் கொன்று குவித்தது மிகப் பெரிய அரசியல் படுகொலை என வரலாறு கூறுகிறது.

பல்லி இனத்திலேயே மிகவும் பெரியது கொமாடோ டிராகன் இது மூன்று மீற்றர் நீளம் வளர்கிறது. 100 கிலோவுக்கு மேல் எடையுள்ளதாகவும் இருக்கிறது.

ஒளியானது ஒன்பது இலட்சத்து 46 ஆயிரத்து 30 கோடி கிலோ மீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு ஓராண்டு காலம் ஆகும். இதுவே ஓர் ஒளி ஆண்டு எனப்படும்.

கி.பி 1835 இல் தான் இந்தியாவில் ஆங்கிலப் பாட மொழியாக அறிமுகமானது.

ஜப்பானியர்கள் மல்லிகை மணத்துடன் கூடிய தேயிலையை அருந்துவார்கள். அரபு நாட்டிலோ புதினா கலந்த தேயிலையை விரும்புகின்றனர். மங்கோலியர்களுக்கோ தேயிலையில் உப்பைச் சேர்த்து அருந்துவதில் விருப்பம் அதிகம்.

ஒரு நிமிடத்தில் 119 குழந்தைகள் பிறக்கின்றன. 38 திருமணங்கள் நடக்கின்றன. 105 பேர் மரணம் அடைகிறார்கள். 35,000 தொன் தண்ணீர் கடலில் கலக்கிறது. 3,00,000 தொலைபேசிகள் ஒலிக்கின்றன. 6,00,000 சிகரெட்டுகள் புகைக்கப்படுகின்றன. 6,38,000 கலன் மதுகுடிக்கப்படுகிறது.

ஷேக்ஸ்பியர் மொத்தம் 38 நாடகங்கள்தான் எழுதியுள்ளார்.

சனவரி முதல் திகதி சுதந்திர தினமாக அமைந்துள்ள ஒரே நாடு கூடான்.

தொலைக்காட்சிப் பெட்டியின் திரை பொஸ்பரஸ் எனும் கனிமத்தால் மூடப்பட்டுள்ளது.

பூமியின் மத்தியில் ஒரு பொருளிருந்தால் அப்பொருளின் எடை பூச்சியமாகும்.



ஜப்பானின் கையடக்கத்தொலைபேசி உற்பத்தி நிறுவனமான வொடபான்ஸ் புதிதாக வெளியிட்டுள்ள கையடக்கத்தொலைபேசி மூலம் கடிதங்களையும் பரிமாறிக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



ஜப்பானின் மூக்குக் கண்ணாடி உற்பத்தி நிறுவனமான வொக்ஸ் நிறுவனம் புதிய வகைக் கண்ணாடியைத் தயாரித்துள்ளது. இக் கண்ணாடியில் MP3 டிஜிற்றல் ஓடியோ பிளேயா பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒருவர் இசையைப் பதிவு செய்யவும் ரசிக்கவும் முடியும்.

# தொகுதி ரீதியான சனாதிபதித் தேர்தல் முடிவுகள்

| மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | மகிந்த | ரணில் | செல்லுபடி அற்றவை | அளிக்கப்பட்ட வாக்குகள் |
|---|---|---|---|---|---|
| அனுராதபுரம் | 536,808 | 231040 | 182956 | 4563 | 423997 |
| அனுராதபுரம் கிழக்கு | 80,971 | 33726 | 25382 | 563 | 60327 |
| அனுராதபுரம் மேற்கு | 68,066 | 31535 | 29829 | - | - |
| கொரவப்பொத்தான | 86,433 | 26330 | 22027 | 481 | 49492 |
| கலாவெவ | 106,717 | 46073 | 33758 | 836 | 81715 |
| கெக்கிராவ | 68,671 | 26220 | 24314 | 506 | 51730 |
| மதவாச்சி | 71,396 | 29071 | 21647 | 446 | 51873 |
| மிகிந்தல | 54,554 | 22454 | 16897 | 429 | 40354 |
| பதுளை | 533,163 | 192734 | 226582 | 6825 | 433424 |
| பதுளை | 48,670 | 17494 | 18624 | 512 | 37135 |
| ஹாலிஎல | 57,900 | 19946 | 23638 | 785 | 45296 |
| பண்டாரவளை | 71,292 | 24294 | 29137 | 888 | 55281 |
| அப்புத்தளை | 56,220 | 15856 | 25935 | 736 | 43318 |
| மகியங்கனை | 78,986 | 26877 | 32592 | 947 | 61470 |
| பசறை | 54,910 | 15717 | 25176 | 874 | 42365 |
| ஊவா பரணகம | 55,655 | 21387 | 22127 | 588 | 44806 |
| வெலிமட | 64,481 | 23736 | 26108 | 640 | 51285 |
| வியலுவ | 45,049 | 16803 | 16423 | 611 | 34705 |
| மட்டக்களப்பு | 318,728 | 28836 | 121514 | - | - |
| மட்டக்களப்பு | 147,979 | 15798 | 65401 | 970 | 83398 |
| கல்குடா | 91,410 | 11105 | 28482 | 503 | 40872 |
| பட்டிருப்பு | 79,339 | 0905 | 24142 | 247 | 25736 |
| கொழும்பு | 1,468,537 | 534431 | 569627 | 12879 | 1127129 |
| பொரளை | 60,678 | 15644 | 25784 | 453 | 42262 |
| கொழும்பு மத்தி | 144,916 | 20395 | 78908 | 1616 | 102040 |
| கொழும்பு கிழக்கு | 65,732 | 16919 | 28832 | 9694 | 46900 |
| கொழும்பு மேற்கு | 38,621 | 5104 | 20475 | 399 | 26264 |
| அவிசாவெல | 101,065 | 41936 | 36227 | 865 | 79963 |
| கொழும்பு வடக்கு | 85,967 | 14270 | 45161 | 939 | 61050 |
| தெகிவளை | 58,728 | 18005 | 24660 | 939 | 43443 |
| ஹோமாகம | 141,974 | 64433 | 43477 | - | - |
| கடுவெல | 148,435 | 65829 | 47025 | 1209 | 115014 |
| கெஸ்பாவ | 140,094 | 66660 | 42042 | 1110 | 110712 |
| கொலன்னாவ | 107,725 | 40616 | 40744 | 892 | 82920 |
| கோட்டே | 73,274 | 26986 | 27106 | - | - |
| மகரகம | 119,137 | 53681 | 36093 | 910 | 91335 |
| மொரட்டுவ | 115,759 | 48047 | 43207 | 975 | 93064 |
| இரத்மலானை | 66,432 | 25004 | 23743 | - | - |
| திகாமடுல்ல | 396,453 | 122329 | 159198 | 2941 | 288208 |
| அம்பாறை | 136,738 | 57624 | 44218 | - | - |
| கல்முனை | 63,251 | 8951 | 29316 | 456 | 39235 |
| பொத்துவில் | 129,798 | 27704 | 55467 | - | - |
| சம்மாந்துறை | 66,666 | 21029 | 24969 | - | - |
| கம்பஹா | 1,364,180 | 596698 | 481764 | 11724 | 1101001 |
| அத்தனகல | 112,898 | 52393 | 33171 | 1090 | 87658 |
| பியகம | 99,193 | 43249 | 34685 | 754 | 79355 |
| தியலுப்பிட்டிய | 93,677 | 39347 | 34954 | 680 | 75780 |
| தொம்பே | 97,143 | 45849 | 30306 | 669 | 77724 |
| கம்பஹா | 124,714 | 62018 | 34376 | 944 | 98185 |
| ஜா-எல | 117,040 | 46950 | 42606 | 973 | 91335 |
| ஹொரண | 114,595 | 49095 | 40476 | - | - |
| களனி | 80,301 | 33179 | 28679 | - | - |
| மகர | 122,039 | 56759 | 37772 | - | - |
| மீரிகம | 107,553 | 45537 | 36345 | 982 | 83783 |
| மினுவாங்கொட | 111,211 | 49509 | 37801 | - | - |
| நீர்கொழும்பு | 89,361 | 24236 | 40805 | 799 | - |
| வத்தளை | 94,455 | 31446 | 40984 | 873 | 74021 |
| காலி | 732,289 | 347233 | 239320 | 5540 | 600008 |
| ஆக்மீமன | 78,496 | 36424 | 24570 | 560 | 62339 |
| அம்பலாங்கொட | 64,864 | 30418 | 20093 | - | - |
| பலப்பிட்டிய | 48,826 | 20743 | 15460 | 291 | 36943 |
| பத்தேகம | 85,786 | 40558 | 27764 | 699 | 70229 |
| பெந்தர-எல்பிட்டிய | 82,282 | 38779 | 25767 | - | - |
| காலி | 71,425 | 24972 | 27166 | 520 | 53198 |
| ஹபராதுவ | 73,606 | 35002 | 22164 | - | - |
| கினிதும | 89,156 | 42305 | 37489 | - | - |
| கரந்தெனிய | 64,111 | 42304 | 31489 | - | - |
| ரத்கம | 73,737 | 34259 | 21330 | - | - |
| அம்பாந்தோட்டை | 396,595 | 202918 | 112712 | 2798 | 322723 |
| பெலியத்த | 72,862 | 36615 | 19290 | 362 | 57075 |
| முல்கிரிகல | 88,528 | 42897 | 24784 | 645 | 69434 |
| தங்காலை | 102,009 | 53291 | 25992 | - | - |
| திஸ்ஸமாறாம | 133,196 | 63197 | 40006 | 1012 | 105525 |
| களுத்துறை | 764,305 | 341693 | 266043 | 6517 | 622377 |
| அகலவத்த | 89,979 | 37518 | 31449 | 656 | 70737 |
| பண்டாரகம | 107,308 | 50481 | 34749 | 870 | 87161 |
| பேருவளை | 99,026 | 37402 | 37390 | 885 | 76736 |
| புளத்சிங்கள | 71,080 | 29218 | 25918 | - | - |
| ஹொரண | 100,085 | 44801 | 34300 | - | - |
| களுத்துறை | 102,020 | 45143 | 32916 | 808 | 79738 |
| மத்துகம | 93,479 | 40006 | 30853 | 756 | 72738 |
| பாணந்துறை | 101,328 | 46097 | 33034 | 762 | 80683 |
| கண்டி | 507,038 | 315672 | 387150 | 9817 | 722437 |
| கலகெதர | 50,890 | 17453 | 20177 | - | - |
| கம்பளை | 84,167 | 25790 | 35829 | - | - |
| ஹாரிஸ்பத்துவ | 138,171 | 43540 | 59899 | 1432 | 106209 |
| கேவாகெற்ற | 61,006 | 19058 | 25874 | - | - |
| குண்டசாலை | 77,020 | 27385 | 31312 | - | - |
| கண்டி | 36,326 | 9435 | 17130 | 335 | 27146 |
| நாவலப்பிட்டி | 80,003 | 28544 | 29881 | - | - |
| பாதுதும்பறை | 71,823 | 20610 | 31957 | 885 | 54318 |
| செங்கடகல | 69,243 | 22670 | 28894 | - | - |
| தெல்தெனி | 41,465 | 15367 | 16646 | - | - |
| உடுதும்பறை | 52,747 | 19973 | 20269 | 546 | 41498 |
| உடுநுவர | 71840 | 22733 | 30979 | - | - |
| யட்டிநுவர | 72,329 | 27428 | 27791 | - | - |
| கேகாலை | 583,282 | 468 507 | 418809 | 8458 | 904955 |
| அரநாயக்க | 49,586 | 18391 | 18906 | - | - |
| டெடிகம | 80,201 | 32231 | 30391 | - | - |
| தெரனியாகல | 58,163 | 22658 | 22087 | - | - |
| கலிகமுவ | 61,932 | 25086 | 21875 | - | - |
| கேகாலை | 63,755 | 27444 | 20451 | - | - |
| மாவனல்ல | 78,208 | 32203 | 25701 | - | - |
| இறம்புக்கனை | 59,711 | 24559 | 20078 | - | - |
| றுவான்வெல | 65,989 | 26522 | 24684 | - | - |
| எட்டியாந்தோட்டை | 65,737 | 25080 | 26056 | 536 | 52410 |
| குருநாகல் | 1,124,076 | 468507 | 418.809 | 8458 | 904955 |
| டிங்கதிரியா | 78,140 | 30624 | 29941 | - | - |
| தம்பதெனியா | 85,455 | 37231 | 29818 | 599 | 68340 |
| தொடங்கஸ்வத்த | 63,143 | 24658 | 21100 | 607 | 46998 |
| கலிகமுவ | 91,698 | 25086 | 21875 | - | - |
| கிரியல்ல | 86,112 | 30785 | 31412 | 793 | 63693 |
| கட்டுகம்பொல | 85,753 | 34357 | 33874 | - | - |
| குளியாப்பிட்டிய | 89,722 | 34357 | 33874 | - | - |
| குருநாகல் | 77,003 | 28791 | 29564 | 625 | 59521 |
| மாவத்தகம | 77819 | 29513 | 28658 | 607 | 59474 |
| நிக்கரவெட்டிய | 83,696 | 32978 | 29691 | - | - |
| பண்டுவஸ்நுவர | 67,023 | 26365 | 25456 | 392 | 52742 |
| பொல்காவெல | 69,821 | 27581 | 25317 | 437 | 53904 |
| வாரியப்பொல | 68,194 | 29155 | 22919 | - | - |
| யாப்பகூவ | 100,497 | 40136 | 34469 | - | - |
| மாத்தளை | 321,876 | 120533 | 125937 | 3785 | 254405 |
| தம்புள்ள | 111,401 | 43853 | 38692 | - | - |
| லக்கல | 60,990 | 23637 | 22249 | 679 | 47460 |
| மாத்தளை | 71,171 | 20945 | 29637 | - | - |
| இரத்தோட்டை | 78,314 | 25551 | 31449 | - | - |
| மாத்தறை | 562,987 | 279441 | 165837 | 4077 | 455799 |
| தெவிநுவர | 73,005 | 35319 | 19288 | 415 | 55769 |
| ஹக்மன | 82,129 | 40567 | 22366 | 571 | 64689 |
| கம்புறுப்பிட்டிய | 75,953 | 37641 | 19771 | 458 | 58695 |
| அக்குரஸ்ஸ | 84,863 | 41091 | 25103 | - | - |
| தெனியாய | 82,636 | 36916 | 28015 | - | - |
| மாத்தறை | 79,784 | 37879 | 22941 | - | - |
| வெலிகம | 84,614 | 40327 | 24225 | 568 | 65633 |
| மொனராகலை | 276,109 | 126094 | 92244 | 2636 | 224086 |
| பிபிலை | 61,660 | 28663 | 22103 | 567 | 52139 |
| மொனராகலை | 87,943 | 37575 | 27754 | 897 | 67215 |
| வெள்ளவாய | 119,506 | 54066 | 39117 | 1055 | 95474 |
| நுவரெலியா | 447,225 | 99550 | 250428 | 5410 | 361285 |
| ஹங்குராங்கொட | 63,421 | 20725 | 27061 | - | - |
| கொத்மலை | 65,998 | 17845 | 33073 | - | - |
| நுவரெலியா | 246,060 | 33453 | 156343 | 2841 | 195802 |
| வலப்பனை | 71,744 | 23688 | 30152 | - | - |
| புத்தளம் | 470,604 | 160686 | 169264 | 3536 | 337319 |

| மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | மகிந்த | ரணில் | செல்லுபடி அற்றவை | அளிக்கப்பட்ட வாக்குகள் |
|---|---|---|---|---|---|
| புத்தளம் | 470,604 | 160,686 | 169,264 | 3536 | 337319 |
| ஆனைமடுவ | 96744 | 38002 | 30358 | 632 | 69771 |
| சிலாபம் | 102,987 | 36115 | 37372 | 685 | 75063 |
| நாத்தாண்டியா | 79,631 | 29227 | 26367 | - | - |
| புத்தளம் | 95,350 | 19939 | 40060 | - | - |
| வென்னப்புவ | 95,892 | 33040 | 32191 | - | - |
| பொலநறுவ | 263,609 | 110499 | 97142 | 2002 | 212032 |
| மின்னேரியா | 72,430 | 31081 | 23819 | - | - |
| மெதிரிகிரிய | 69,230 | 27230 | 25533 | 402 | 53790 |
| பொலநறுவ | 121,949 | 47188 | 44951 | 936 | 94119 |
| இரத்தினபுரி | 668,217 | 294260 | 252838 | 5510 | 560584 |
| பலாங்கொடை | 87,938 | 35410 | 34049 | - | - |
| எகிலியகொடை | 83,705 | 47188 | 44951 | - | - |
| கலாவெவ | 52,156 | 24463 | 18740 | 414 | 44274 |
| கொலன்னாவ | 115,991 | 52947 | 38163 | - | - |
| நிவித்திக்கல | 78,157 | 34569 | 29287 | - | - |
| பெல்மதுல | 65,445 | 26511 | 27178 | - | - |
| இரத்தினபுரி | 100,230 | 43251 | 37253 | - | - |
| இறக்குவானை | 84,595 | 33169 | 34413 | - | - |
| திருமலை | 238,755 | 55680 | 92197 | 2094 | 152428 |

| மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | மகிந்த | ரணில் | செல்லுபடி அற்றவை | அளிக்கப்பட்ட வாக்குகள் |
|---|---|---|---|---|---|
| மூதூர் | 91,095 | 18818 | 29061 | - | - |
| சேருவெல | 250,386 | 21353 | 17835 | - | - |
| திருமலை | 78,906 | 10878 | 41369 | 956 | 54062 |
| வன்னி | 66,596 | 17197 | 65798 | 1398 | 85874 |
| மன்னார் | 104,884 | 2183 | 20463 | 361 | 23426 |
| முல்லைத்தீவு | 66596 | 510 | 372 | 11 | 902 |
| வவுனியா | 104884 | 7939 | 33553 | - | - |
| யாழ்ப்பாணம் | 701,938 | 1967 | 5523 | 656 | 8524 |
| சாவகச்சேரி | 62,022 | 10 | 33 | 03 | 53 |
| யாழ்ப்பாணம் | 62,089 | 124 | 301 | 17 | 442 |
| காங்கேசன்துறை | 67,133 | 97 | 148 | 07 | 267 |
| ஊர்காவற்றுறை | 52,986 | 139 | 98 | 13 | 276 |
| கிளிநொச்சி | 89,454 | 00 | 01 | - | 01 |
| கோப்பாய் | 63,752 | 54 | 267 | 26 | 388 |
| மானிப்பாய் | 68,783 | 64 | 256 | 17 | 357 |
| நல்லூர் | 70,251 | 100 | 198 | 05 | 313 |
| பருத்தித்துறை | 47,188 | 09 | 25 | 04 | 38 |
| உடுப்பிட்டி | 55,499 | 11 | 52 | 01 | 65 |
| வட்டுக்கோட்டை | 62,781 | 53 | 191 | 15 | 278 |

# கிளி/பிரமந்தனாறு ம.வி. 16ஆம் ஆண்டு நிறைவு விழா

(கண்டாவளை)

கிளி/ பிரமந்தனாறு ம.வி. 16ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல்9.00 மணிக்கு வித்தியாலய முதல்வர் க.ச.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் மங்கல விளக்கை ஆசிரியர் ப.இரங்கநாதன், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் ஏற்ற தமிழீழ தேசியக் கொடியை கண்டாவளைக் கோட்டகல்விக்கழகப் பொறுப்பாளர் சி.அறிவன்பன் ஏற்றினார். வரவேற்புரையை ஆசிரியை திருமதி சறோ அரியநாயகமும் கருத்துரைகளை பாடசாலை முதல்வர், உப அதிபர் செபரத்தினராசா, திருகோணமலை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன் ஆகியோரும், சிறப்புரையை கண்டாவளை கோட்ட கல்விக்கழகப்பொறுப்பாளரும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாணவர்களின் வரவேற்பு நடனம், கிராமியநடனம், காவடி ஆட்டம், கவிதை, பேச்சு, பாடல் என்பன இடம்பெற்றன. இறுதியாக பாடரீதியாகவும், விளையாட்டுத்துறையிலும் வெற்றியீட்டியமாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களை திருகோணமலை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர், கண்டாவளை கோட்டகல்விக்கழக பொறுப்பாளர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (14)

# ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஞாபகார்த்த பேச்சுப்போட்டி முடிவுகள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 126 ஆவது குருபூசைத்தினத்தின் சார்பாக கடந்த செவ்வாய்க்கிழமை நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**மேற்பிரிவு:-**

முதலாமிடம் தாரணி செல்வராசா - கிளி.இராமநாதபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் சற்குணராசா நிகேஷ் - யாழ்யாழ்ப்பாணக் கல்லூரி,மூன்றாமிடம் லாவண்யா இரத்தினசிங்கம் யாழ். அருணோதயாக் கல்லூரி, மூன்றாமிடம் கலையரசி கணபதிப்பிள்ளை - யாழ்.புனித திரேசா மகளிர் கல்லூரி.

**மத்தியபிரிவு:-**

முதலாமிடம் சின்னத்துரை சோபிதன் யாழ்.சாவகச்சேரி இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் கிருஷ்ணா கந்தசுவாமி - யாழ்.மகாஜனாக்கல்லூரி, மூன்றாமிடம் சி.அகிலா யாழ். சோமஸ்கந்தா கல்லூரி.

**கீழ்ப்பிரிவு:-**

முதலாமிடம் கோபிகா சேனாதிராஜா யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, இரண்டாமிடம் தர்சினி சச்சிதானந்தம் கிளி.இராமநாதபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் குலதீஸ்வரன் சுஜீவன் யாழ்.கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், மூன்றாமிடம் சச்சிதானந்தசிவம் வேனிலன் கிளிநொச்சி இந்துக்கல்லூரி.


# வருடாந்த பொதுக்கூட்டம் கிளிநொச்சி மருத்துவசங்கம்

**கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 19.11.2005 சனிக்கிழமை மாலை 7.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் விடுதியில் நடைபெற உள்ளது. அங்கத்தினர் அனைவரும் தவறாது. கலந்து கொள்ளவும்.**

**செயலாளர்,**
**மருத்துவ சங்கம்,**
**கிளிநொச்சி.**

(சி-13354)


# தேசிய சூழல் மேம்பாட்டு வாரம் நவம்பர் 14-20

(அலுவலக செய்தியாளர்)

சூரியனை வலம்வரும் கோள்கள் அனைத்திலும் நாம் வாழும் பூமியே மிகவும் தனித்தன்மை வாய்ந்தது.சூரியனுக்கு இன்னும் அருகில் அமைந்திருந்தால் பூமியின் நீரெல்லாம் ஆவியாகியிருக்கும்.மேலும் சற்றுத்தள்ளியிருந்ததால் நீர் முழுவதும் உறைந்து பனிக்கோளமாகியிருக்கும். "அகலாது அணுகாது தீக்காய்வோர்" போல நமது பூமியிருப்பதால் நாம் உயிர் வாழ்கின்றோம்.

ஆனால் இத்தகைய அரியபூமியில் அரிய உயிரினமாக திகழும் மனிதன் இதனை உணர்ந்திருக்கின்றானா? என்பதே இன்றைய வினா. இயற்கைக்கு மாறாக தனது வாழ்க்கை முறைகளால் மனிதன் இந்த இனிய பூமியை சிறுகச் சிறுக சிதைத்து வருகின்றான்.இதுவே இன்றைய உலகில் முதலிடம் வகிக்கும் பேராபத்து.

இதேவேளை எமது தாயகத்தில் எமது இருப்புக்கு பெருத்த ஆபத்தை விளைவிக்கும் பேரினவாத எதிரியிடமிருந்து எம்மினிய தாயகத்தை மீட்டிடும் வேளை சூழல் மாசடைதல் எனும் பேரரக்கனிடமிருந்தும் எமது தாயகத்தை மீட்டிட வேண்டும். எமது தாயகத்தைக் காத்திட மாவீரரான அனைவருக்கும் எமது நன்றியைச் செலுத்தும் நாள் நெருங்கும், இப்புனிதவேளையில் எமது தாயகத்தைத் தூய்மைப்படுத்தி அழகுபடுத்துவதே எமது முதன்மைப்பணி. எனவே சூழல் மேம்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வாரத்தில் தாயகப்பிரதேசத்தின் சூழலை சுத்தப்படுத்தி சுகாதாரம் பேணி எமது ஆரோக்கியமான அழகான அன்பான இயற்கையோடு நல்லுறவினைப் பேணும் வாழ்விற்கு வழிசமைப்போம்.

## நாம் உடன் செய்ய வேண்டியவை எவை?

திண்மக்கழிவுகளை அகற்றல்

* பொலித்தீன், பிளாஸ்ரிக், அஸ்பெஸ்டஸ், பற்றறி, இரும்புக்கழிவுகள், போத்தல்கள் போன்ற
  * சூழலுக்கு ஒவ்வாத கழிவுப்பொருட்களை அகற்றல்.
  மாசடைந்த நீரை தேக்கி வைத்திருக்கும் பொருட்களை அகற்றுவதும், அவ்வாறான இடங்களை சுத்தம் செய்வதன் மூலம் தொற்று நோய்களைத்தடுத்தலும்.
  * கழிவு வாய்க்கால்களை நேர்த்தியாக்குவதன் மூலம் கழிவு நீரினால் ஏற்படக்கூடிய நோய்களையும் அசௌகரியங்களையும் தடுத்தல்
  * கழிவு சேகரிப்பான்களை பொருத்தமான இடங்களில் வைத்தல்
  * கண்ணாடித்துண்டங்கள், தகரங்கள் போன்ற கழிவுப்பொருட்களை அகற்றுவதன் மூலம் அத்தகைய கழிவுகளின் பரவலான தேக்கத்தை தவிர்த்தல்.

சிரமதானம் செய்தல் (வினைக்கொடைப்பணி)

பாதைகள், வாய்க்கால்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சம்பந்தப்பட்டதிணைக்களங்கள், பொது மக்களை பயன்படுத்தி சிரமதானம் செய்தல்

மரநடுகை

* வீடுகள், வீதியோரங்கள், பொது இடங்கள் என சகல இடங்களுக்குமான மரநடுகையை மேற்கொள்ளல்.
* ஏற்கனவே நடப்பட்டு பராமரிப்பின்றி இருக்கும் மரக்கன்றுகளைப் பராமரிப்பதுடன் தேவையான இடங்களில் மரங்களைப் பாதுகாக்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்தல்.

பங்குபற்றுவோர் யார்?

* பொது மக்கள்
* தனிநபர்கள், ஊரக மட்ட அமைப்புக்கள்
* தேசிய எழுச்சிப்பேரவைகள்- ஊரக மேம்பாட்டுப்பேரவைகள்
* விடுதலைப்புலிகள் அமைப்புக்கள்
* அரச திணைக்களங்கள்
* பிரதேச சபை
* அரசசார்பற்ற நிறுவனங்கள்
* வர்த்தக நிலையங்கள்
* பாடசாலைகள்
* கூட்டுறவுச்சங்கம்
* விவசாய அமைப்புக்கள்
* வணக்கத்தலங்கள்
* மாகாண சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளர்களும் சுகாதார வைத்திய அதிகாரிகளும்
* கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சமாசங்கள்
* இடைத்தங்கல் முகாம்கள்
* கைத்தொழிற்கூடங்கள்
* போக்குவரத்துக்கழகங்கள்
* விளையாட்டுக்கழகங்கள்
* சுற்றுச்சூழல் அதிகாரிகள்
* ஊடகங்கள்

-சூழல் நல்லாட்சி ஆணையம்

(லோ. தீ)

# மும்பை குண்டு வெடிப்பு குற்றவாளி அபுசலீம்

# அரசதரப்பு சாட்சியாக மாறுகிறார்?

(மும்பை)

***மும்பை தொடர் குண்டு வெடிப்பு குற்றவாளியான அபுசலீம் அரசதரப்பு சாட்சியாக மாறுகிறார். மும்பையில் 1993 ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் தொடர்புடைய அபுசலீமையும் அவரது காதலியும் நடிகையுமான மோனிகா பேடியையும் போர்த்துக்கல் நாட்டில் இருந்து இந்தியாவுக்கு சி.பி.ஐ சமீபத்தில் கொண்டு வந்தது. அபு சலீமிடம் மும்பையிலும் மோனிகா பேடியிடம் ஹைதராபாத்திலும் தீவிர விசாரணை நடந்து வருகிறது.***

தாவூத் இப்ராகிமின் வலது கரமாக இருந்த அபு சலீமிடம் நடத்தப்படும் விசாரணையில் பல புதிய தகவல்கள் சி.பி.ஐ க்குக் கிடைத்துள்ளன. தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் தனக் குள்ள தொடர்பு குறித்து சி.பி.ஜயி டம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் அபு சலீம். எனினும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அவர் அளிக்க வில்லை என்று அவரது வழக்கறிஞர் மறுத்தார்.

அபு சலீம் நடவடிக்கைகள் தொடர்பான முழு விபரங்களையும் தெரிவிக்கும் ரகசிய குறிப்பேடு ஒன்றும் சி.பி.ஐ யிடம் சிக்கியுள்ளது. இதனால் மும்பையில் உள்ள சினிமா பிரபலங்கள் பீதியில் உள்ளனர்.

இந்த நிலையில் தெற்கு மும்பையில் ஒரு ரகசிய இடத்தில் ஐந்தாவது நாளாக நேற்றுமுன் தினமும் அபு சலீமிடம் துருவித் துருவி விசாரணை நடத்தியது சி.பி.ஐ எந்த விதமான கேள்வி களுக்கும் சளைக்காமல் அவர் பதில் அளித்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் சி.பி.ஐ விசாரணையின் போது தனது வழக்கறிஞரை உடன் வைத்துக் கொள்ள அனுமதி கேட்டு நீதி மன்றத்தில் அபு சலீம் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. சி.பி.ஐ தன்னை சித்திரவதை செய்து வாக்குமூலம் வாங்கலாம் என்ற அனுமானத்தின் மீது இந்த மனு தாக்கல் செய்யப் பட்டதாகக் கூறிய நீதி மன்றம், தேவைப்பட்டால் இந்தக் கோரிக்கை யை சி.பி.ஐ யிடமே முதலில் அபு சலீம் வைக்கலாம் என்றும் கூறியது.

இந்த நிலையில்தான் அபு சலீம் அரசதரப்பு சாட்சியாக மாறத் தயாராக இருப்பதாக அவரது வழக்கறிஞர் அசோக்சரோகி தெரிவித்திருக்கிறார்.


### பொத்தகசாலைக்கு ஆள் தேவை

வன்னிப்பகுதியில் உள்ள அறிவமுது பொத்தக சாலையில் பணிபுரிய ஆண்கள் தேவை கல்வித தகைமையுடன் கிளிநொச்சி அறிவமுதுக்கு வரவும். உணவு,தங்குமிட வசதி உண்டு. (சி.13349)



### சான்றிதழ் வழங்கல் நிகழ்வு

எம்மால் நடாத்தப்பட்டு வந்த உதவி மருந்தாளர் பயிற்சி நெறியில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26.11.2005 சனிக்கிழமை 3.00 மணிக்கு கிளி. கனிஸ்ர மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. எனவே அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகிறோம்.

நிர்வாகப் பணிப்பாளர்,
(சி.13353) நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்.


# மராட்டிய முதல்வருக்கு கொலை மிரட்டல்

(புதுடில்லி)

கிழக்குப் பகுதியில் மராட்டிய மாநிலத்தில் உள்ள காச்சிரோலி, பாந்த்ரா, சந்திராபூர் ஆகிய மாவட்டங்களில் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகம்உள்ளது. இவர்களில் ஒரு பிரிவினர்.மராட்டிய முதல்மந்திரி விலாஸ்ராவ் தேஷ்முக்குக் அவர்கள் கொலை மிரட்டல் விடுத்து இருக்கிறார்கள்.

இது தொடர்பாக உள்துறை அலுவலகத்திற்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது, நக்சலைட்டுகளை சரண் அடையச் செய்யும்திட்டத்தை வகுத்த முதல் மந்திரி தேக்முக் எங்களால் கொலை செய்யப்படுவார்.

சந்திரபாபு நாயுடு வழியில் அவர் ஆட்சி நடத்துகிறார். இதனால் மராட்டியத்தில் கிராமப்புறப்பகுதி பிரச்சினைகள் புறக்கணிக்கப் படுகின்றன. இதே நிலை தொடர்ந்தால் முடிவு விபரீதமாக இருக்கும் என எச்சரித்துள்ளனர்.

# தமிழக சிறைகளுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(சென்னை)



பீகாரில் சிறை தகர்ப்பு சம்பவத்தையடுத்து தமிழகத்தில் சிறைகளுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. சென்னை மத்திய சிறையில் துப்பாக்கி ஏந்திய சிறப்புப் படை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பகார் மாநிலம் ஜெகநாபாத்தில் சிறையை தகர்த்து பொலிசாரைச் சுட்டுக்கொன்று அங்கு இருந்த கைதிகளைத் தீவிரவாதிகள் மீட்டுச்சென்றனர். அந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.அதேநேரத்தில் முக்கிய நகரங்களிலுள்ள சிறைகளைத் தீவிரவாதிகள் தகர்க்கலாம் என்று மத்திய உளவுத்துறைப்பொலிசார் எச்சரித்தனர்.

அதேநேரத்தில் தமிழக உளவுத்துறைப்பொலிசும், சிறைகளுக்கு பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்று அறிக்கை கொடுத்தனர். அதனால் செனனை, கோவை, திருச்சி, கடலூர், சேலம் உட்பட பத்து மத்திய சிறைகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.சென்னை மத்திய சிறையில் இரண்டாயிரத்து எழுநூறு கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அதில் 20இற்கும மேற்பட்டவர்கள் தீவிரவாதிகள். அதனால்,மத்திய சிறைவாசலில் துப்பாக்கி ஏந்திய பொலிசார் மணல் மூட்டைகளுக்குப்பின்னால் அமர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏற்கனவே சிறைக்கு வெளியே தமிழ் நாடு சிறப்புக்காவல் படையைச்சேர்ந்த 100பேர் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இப்போது துப்பாக்கி ஏந்திய சிறப்புப்படைப்பாதுகாப்புப் போடப் பட்டுள்ளது.24மணி நேரமும் பாதுகாப்புப் பணியில் துப்பாக்கி ஏந்திய பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.






சதம் அடித்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் குசே

# ஹெய்டன், குசே சதம் ஓட்டம் குவிக்கிறது அவுஸ்.

அவுஸ்திரேலியாவின் கோபாட்டில் நடைபெற்றுவரும் மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வலுவான நிலையில் உள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் மிகப் பெரிய ஓட்டங்களால் தோல்வியடைந்த மேற்கிந்தியத்தீவு நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பொடுத்தாடி முதல் இனிங்சிற்காக 149 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

மேற்கிந்தியத்தீவு வீரர்கள் மெக்ராத், பிரெட்லீ ஆகியோரின் வேகத்தில் போட்டியின் முதல் நாளிலேயே பரிதாபமாக வெளியேறினர். துடுப்பாட்டத்தில் ஹைல்ஸ் 56, சந்திரபோல் 39 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் மெக்ராத் நான்கு விக்கெட்டுக்களையும், பிரெட்லீ, மெக்கில் தலா மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக ஆடும் அவுஸ்திரேலியா இரண்டாம் நாளில் மழை குறுக்கிட்டபோதும் ஹெய்டன், குசே அபார சதம் அடிக்க நேற்றைய ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் ஹெய்டன் 110 ஓட்டங்களையும், குசே ஆட்டமிழக்காது 116 ஓட்டங்களையும்,பொண்டிங் 17 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# தோல்வியிலிருந்து வலுவாக மீண்டு இனிவரும் போட்டிகளில் சிறப்பாக ஆடுவோம்



-ராவிட்

முதல் ஆட்டத் தோல்வியில் இருந்து வலுவாக மீண்டு வரும் போட்டிகளில் சிறப்பாக ஆடுவோம் என்று இந்திய அணித் தலைவர் ராவிட் தெரிவித்துள்ளார்.

தலைவராகப் பொறுப்பேற்ற பின் சொந்த ஊரில் முதல் ஆட்டத்தில் ஆடவுள்ள ராவிட் நிருபர்களிடம் கூறியதாவது;

முதல் ஆட்டத்தோல்வியிலிருந்து இந்திய அணி வலுவாக மீண்டு வந்து வரும் ஆட்டங்களில் ஆட்டத்திறனை அதிகரித்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும். முதல் ஆட்டத்தில் இந்திய விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிந்த நிலையில் வீரர்கள் போராடி ஓட்டம் சேர்த்த விதம் திருப்தி அளித்தது. யுவராஜ், பதான்,ஹர்பஜன், அகர்கர் ஆகியோர் ஆட்டம் நன்றாக இருந்தது. எல்லோரும் மனப்பூர்வமாக நன்றாக ஆடினால் நல்ல முடிவு கிடைக்கும்.

முதல் 15 ஓவர்களில் அணியின் துடுப்பாட்டம் இன்னும் மேம்பட வேண்டும். அத்தோடு பந்து வீச்சில் உதிரி ஓட்டம் கொடுப்பதைக் குறைக்கவேண்டும் இவ்வாறு ராவிட் கூறினார்.



# முறைகேடாக பந்து வீசினர் மலிக், அகமட் மீது விசாரணை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சபிர் அகமட், சொகைப்மலிக் இருவரினதும் பந்து வீச்சில் தவறு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து அவர்கள் சர்வதேசக்கிரிக்கெட் சபையின் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் இங்கிலாந்துடனான முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் போது அகமட் பந்தை வீசியெறிந்ததாகவும் சுழற்பந்து வீச்சாளர் மலிக் 15 பாகைக்கு மேல் தனது மணிக்கட்டைச் சுழற்றி பந்து வீசியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்விருவரும் இப்போட்டிக்கு முன்பு நடைபெற்ற பயிற்சியின் போது இவ்வாறான தவறுகளைச் செய்யவில்லை எனக்குறிப்பிட்ட போட்டி நடுவர் பில்லிபவுடன் மூன்றாம் நாள் ஆட்டத்தின் போது தவறுகள் உணரப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். ஐ.சி.சி இதனை ஆராய்ந்து விளக்கம் அளிக்கும் எனத் தெரிவித்துள்ள அவர் இப்போட்டித் தொடரிலிருந்து நீக்கப்படாவிட்டாலும் பந்துவீச்சில் தவறு காணப்பட்டால் இனிவரும் போட்டிகளில் அவர்கள் பங்கெடுக்க முடியாது இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இரண்டாவது ஒருநாள் போட்டி பெங்களூரில் இன்று ஆரம்பம்





இந்தியா, தென்ஆபிரிக்கா இடையிலான இரண்டாவது போட்டி பெங்களூரில் இன்று நடைபெறுகின்றது.

இந்தியா, சென்றுள்ள தென்ஆபிரிக்க கிரிக்கெட் அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது. இத்தொடரை இந்தியா தோல்வியுடன் தொடங்கியுள்ளது. ஹைதராபாத்தில் நடந்த முதல் போட்டியில் தென்ஆபிரிக்கா ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து இரண்டாவது போட்டி பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இன்று நடக்கிறது.

*-மாவீரர் வெற்றிக் கிண்ணம்-*

## கிளி.மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான தெரிவுப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட மாவீரர் வெற்றிக் கேடயத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் அணிகளுக்கிடையேயான போட்டிகள் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

பூநகரிப் பிரதேசத்துக்கான போட்டிகள் எதிர் வரும் 20 ஆம் திகதி தொடக்கம் பூநகரி தம்பிராய் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தப்படும் என பூநகரி பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர் மூர்த்தி தெரிவித்துள்ளார்.

கரைச்சி,கண்டாவளைப் பிரதேசத்திற்கான போட்டிகளுக்கான ஏற்பாடுகள் விளையாட்டுத் துறைத் தலைவர் மடத்மநாதனால் செய்யப்படவுள்ளது. பங்குபற்ற விரும்பும் கழகங்கள் அவருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

இதேபோன்று பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கான போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் பிரதேச செயலர் பணிமனையில் விளையாட்டு உத்தியோகஸ்தர் ஜெயக்குமாருடன் தொடர்பு கொள்ளும் படி கேட்கப்படுகின்றனர்.




# உலகக் கிண்ண கால்பந்துப் போட்டி 32 ஆண்டுகளுக்கு பின் அவுஸ். தகுதி



உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிக்கு அவுஸ்திரேலிய அணி 32 ஆண்டுகளுக்கு பின் தகுதி பெற்றுள்ளது.

உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.

18 ஆவது உலக கோப்பை கால்பந்துப்போட்டி ஜேர்மனியில் அடுத்த ஆண்டு (2006) ஜூன் ஒன்பதாம் திகதி மூனிச்சில் தொடங்குகிறது ஜூலை ஒன்பதாம் திகதி பெர்லினில் போட்டி முடிவடைகிறது. டிசம்பர் ஒன்பதாம் திகதி போட்டி அட்டவணை குலுக்கல் மூலம் முடிவு செய்யப்படும். இந்த போட்டிக்கான தகுதி சுற்றுப் போட்டி பல்வேறு நாடுகளில் நடந்து முடிந்துள்ளது.

இதன் ஒரு ஆட்டத்தில் அவுஸ்திரேலியா- உருகுவே அணிகள் மோதின. இந்த ஆட்டம் சிட்னியில் நடந்தது. பரபரப்பான இந்த ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலை வகித்தன.

இதனால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க தண்ட உதை கடைப் பிடிக்கப்பட்டது. இதில் அவுஸ்திரேலிய 4-2 என்ற கோல் கணக்கில் உருகுவே அணியைத் தோற்கடித்து உலக போட்டிக்கு தகுதி பெற்றது.

உருகுவே அணி 1930,1950 ஆம் ஆண்டுகளில் உலகக் கோப்பையைக் கைப்பற்றிய அணியாகும். அந்த அணிக்கு அவுஸ்திரேலியா அதிர்ச்சித் தோல்வி அளித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது

அவுஸ்திரேலியா கடைசியாக 1974 ஆம் ஆண்டில் உலகக் கோப்பைப் போட்டியில் ஆடியது. 32 ஆண்டுகளுக்குப் பின் தற்போது அவுஸ்திரேலியா தகுதி தேடிக் கொண்டுள்ளது. இது அந்த நாட்டு கால்பந்து ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதேவேளை டிரினிடாட் - டொபாக்கோ அணி 1-0 என்ற கோல் கணக்கில் பக்ரைனைத் தோற்கடித்து முதல் முறையாகத் தகுதி பெற்றது.

சுவிட்சர்லாந்து அணி 4-2 என்ற கோல் கணக்கில் துருக்கியைத் தோற்கடித்து 12 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் உலகக் கோப்பைப் போட்டிக்கு தகுதி பெற்றது.செக் குடியரசு அணி 1-0 என்ற கோல் கணக்கில் நோர்வேயை தோற்கடித்து தகுதி பெற்றது ஸ்பெயின் தொடர்ந்து எட்டாவது முறையாக இந்தப் போட்டிக்கு தகுதி தேடிக் கொண்டது.

உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்கும் 32 அணிகள் விபரம் வருமாறு:-

அங்கோலா, ஐவரி கோஸ்ட், டோகோ, கானா, துனிசியா, (ஆபிரிக்க மண்டலம்) ஜப்பான், ஈரான், தென் கொரியா, சவூதி அரேபியா (ஆசிய மண்டலம்), ஜேர்மனி, உக்ரைன், நெதர்லாந்து, போலந்து, இங்கிலாந்து, குரோஷியா, இத்தாலி, போர்த்துக்கல், சுவீடன், செர்பியா- மான்டேகுரோ, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், செக் குடியரசு,(ஐரோப்பா மண்டலம்), அமெரிக்கா, மெக்சிகோ, கோஸ்டாரிகா, டிரினிடாட் - டொபாக்கோ,(வடக்கு மத்திய அமெரிக்க மண்டலம்), அவுஸ்திரேலியா (ஓசியானா மண்டலம்) ஆர்ஜென்டினா, பிரேசில், ஈகுவடோர், பராகுவே (தெற்கு அமெரிக்க மண்டலம்).

# அகில உலக கராத்தேப் போட்டி; மன்னார் மாணவி பதக்கம் வென்றார்



கடந்த மாதம் 30,31 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற அகில உலகரீதியிலான கராத்தேப் போட்டியில் மன்னார் புனிதவளனார் றோ.க.த.வித்தியாலய மாணவி ஜெஸ்மன் றெஸ்னிக்கா பீரிஸ் பதக்கம் வென்றுள்ளார்.

இவர் காட்டா போட்டியில் இரண்டாம் இடத்தையும் குழுத் தேர்வில் மூன்றாம் இடமும் பெற்று முறையே வெள்ளி, வெண்கலப்பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

பத்தாம் ஆண்டில் கல்வி பயிலும் மேற்படி மாணவி கல்வியில் சிறந்த பெறுபேற்றைக் கொண்டுள்ளதுடன் நல்லொழுக்கம் கொண்டவர் எனவும் பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது.

# மாவீரர் தின பெரு விளையாட்டு மன்னாரில் இன்று ஆரம்பம்

தமிழீழ விளையாட்டுத்துறையினால் வருடாந்தம் மாவட்டரீதியில் நடாத்தும் உதைபந்தாட்ட கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. மன்/கருங்கண்டல் ம.வி மைதானத்தில் இடம் பெறவுள்ள போட்டிகளில் மன்னார் மாவட்டத்தில் உள்ள முன்னணி கழகங்கள் உட்பட 31 உதைபந்தாட்ட அணிகளும், 11 கரப்பந்தாட்ட அணிகளும் பங்கு பற்றுகின்றன. பிரதேச விளையாட்டு அதிகாரிகள் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட சம்மேளனங்கள் போட்டிகள் தொடர்பாக பல முன் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் இறுதி நாள் நிகழ்வின்போது அகில இலங்கை ரீதியில் வெற்றி பெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



எமது விடுதலைப் போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத் திற்குக் காப்பரணாக நிற்க வேண்டும்.


தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 19.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## பேரினவாதத்தின் வெற்றி!

சிறிலங்காவின் ஐந்தாவது சனாதிபதிக்கான தேர்தலில் கடும் போட்டியின் மத்தியில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார். இத்தேர்தல் வெற்றி மூலம் தீவிர பௌத்த-சிங்கள அடிப்படை வாதிகள் மற்றுமொரு தேர்தலில் வெற்றியைப் பெற்றுள்ளனர் என்று கூறுதல் தவறாகமாட்டாது.

இத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கும்- ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது என்பதற்கு மகிந்த ராஜபக்ஷ பலதேர்தல் தொகுதிகளில் தேர்தல் மாவட்டங் களில் ரணில் விக்கிரமசிங்கவை விடப் பின்தங்கியிருந்தமையையும், குறைந்த பட்ச அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றியீட்டியமையையும் சுட்டிக்காட்டலாம். அதாவது கடந்த தேர்தலில் 1999 ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியை விட சுமார் ஏழு இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை அதிகம் பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னனி வேட்பாளரான சந்திரிகாவை விட குறைந்த அளவிலேயே மகிந்த ராஜபக்ஷ வாக்குகளை பெற்றுக்கொண்டுள்ளார். அதிலும் குறிப்பாக கடந்த தேர்தலில் (1999) ஜே.வி.பி தனித்து போட்டியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் ஜே.வி.பி. யுடன் கூட்டுச்சேர்ந்தும் மகிந்த ராஜபக்ஷவினால் சுமார் இரண்டு இலட்சத்திற்கும் குறைவான மேலதிக வாக்குகளையே பெற முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இதனை வைத்துக்கொண்டு சிங்கள வாக்காளர்கள் காரணமாக இருகட்சிகள் இடையேயும் கடும் போட்டி நிலவியது என முடிவிற்கு வருதல் தவறானது என்றே கூறுதல் வேண்டும்.

ஏனெனில், பௌத்த-சிங்கள வாக்காளர்கள் கடந்த காலம் போல் மிகவும் தெளிவாகவே இம்முறையும் தேர்தலில் வாக்களித் துள்ளார்கள். அதாவது பௌத்த-சிங்கள அடிப்படை வாதத்திற்கு ஆதரவாக அவர்கள் வாக்களித்துள்ளார்கள் என்பது தேர்தல் முடிவுகளில் இருந்து உறுதியாக வெளிப்படுவதாகவுள்ளது.

அதாவது மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்பட்டிருந்த பௌத்த-சிங்கள தீவிர அடிப்படைவாத கூட்டணிக்கே சிங்கள மக்கள் வாக்களித்திருந்தனர். ரணில் விக்கிரமசிங்கவினால் மகிந்த ராஜபக்ஷவிற்குக் கொடுக்கப்பட்ட போட்டியானது சிறுபான்மை யினங்களின் வாக்குகளினால் கொடுக்கபட்டதே ஒழிய சிங்கள வாக்காளர்களின் மூலம் கொடுக்கபட்டதல்ல.

எடுத்துக்காட்டாக மகிந்த ராஜபக்ஷ பௌத்த சிங்கள வாக்காளர்களை முழு அளவில் அன்றிப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளில் மிகவும் இலகுவாகவும் உறுதியாகவும் தமது வெற்றியை பெற்றுக்கொண்டிருந்தார். மாறாக மகிந்த ராஜபக்ஷ பின்னடைவைச் சந்தித்த பெரும்பான்மையான தொகுதிகள், மாவட்டங்கள் என்பனவற்றின் தேர்தல் முடிவுகளை சிறுபான்மை இன மக்கள் தீர்மானித்திருந்தார்கள் என்பதே சரியானதாகும். குறிப்பாக கூறுவதானால் ரணில்விக்கிரமசிங்க வெற்றி பெற்ற மாகாணங்களான மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், போன்ற வற்றில் அவரின் வெற்றியை மலையக மக்களும் முஸ்லிம் மக்களும் பெருமளவில் தீர்மானித்திருந்தனர் என்பதே வெளிப்படையான தாகும்.

ஆனால், பௌத்த-சிங்கள பெரும்பான்மையினர் இவ்வாறு வாக்களித்திருப்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. சிறிலங்கா வின் தேர்தல்கள் யாவற்றிலும் பௌத்த-சிங்களவாத பேரின வாதத்தை வலியுறுத்தும் வகையிலேயே அவர்கள் தேர்தலில் வாக்களித்துள்ளார்கள். அதாவது பௌத்த-சிங்கள அடிப்படை வாதத்தை அதிகளவில் வலியுறுத்தும் பேரினவாத சக்திகளையே அவர்கள் ஆதரித்துள்ளனர்.

1994 இல் சிங்கள மக்கள் சனாதிபதி சந்திரிகாவிற்கு வாக்களித்த போது சமாதானத்திற்கு வாக்களித்ததாக கூறப் பட்டது. ஆனால் அடிப்படையில் அவ்வாறு இல்லை தென்னிலங்கை யில் அன்று நிலவிய பெரும் பதற்றமான சூழ்நிலையைத் தவிர்ப்பதற் காகவே சிங்களவர்கள் அன்று வாக்களித்திருந்தார்கள். குறிப்பாக ஐ.தே.கட்சியின் 17 வருட ஆட்சியில் ஏற்பட்ட அதிருப்தி தென் னிலங்கையில் ஏற்பட்ட நெருக்கடி பதற்றம் போன்றவற்றிலிருந்து விடுபடவே வாக்களித்தார்கள்.

அவ்வாறு இல்லாதுவிடின் சமாதான பேச்சுவார்த்தைகள் குழப்பமடைந்து பெரும் யுத்தம் மூண்டபின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்ற பல தேர்தல்களிலும் சனாதிபதி சந்திரிகா வெற்றி பெற்றிருக்க முடியாது. அதாவது மக்கள் சமாதானத்தை வலியுறுத்தி தேர்தலில் வாக்களித்திருத்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு எப்பொழுதும் அவர்கள் வாக்களிக்கவில்லை.

பௌத்த- சிங்கள அடிப்படை வாதத்தை வலியுறுத்தும் வகையிலும்-தமிழ் மக்கள் மீதான மேலாதிக்கத்தை வலியுறுத்தும் வகையிலுமே வாக்களித்துள்ளனர். இத்தகையதொரு நிலையே இம்முறை தேர்தலிலும் பிரதிபலித்துள்ளது. ஆகையினால், சிறிலங்காவில் எதிர்கால தேர்தல்களில் பௌத்த-சிங்கள பேரினவாதத்தை அரசியல் மூலதனமாக்கும் அரசியல் கட்சிகளே முதன்மை பெற வாய்ப்புள்ளது. இந்நிலையில் சிறுபான்மை யினத்தவரின் உரிமைகள் என்பது கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

## தேர்தலுக்கெதிரான அச்சுறுத்தல்களால் தென்னிலங்கையில் வாக்களிப்பு பாதிப்பு!

– 'பவ்ரல' அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் தேர்தலுக் கெதிரான அச்சுறுத்தல்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் குறிப்பிட்ட மக்கள் தொகையினர் வாக்களிக்க வில்லை என சுதந்திரமானதும் நீதி யானதுமான தேர்தலுக்கான "பவ்ரல்" அமைப்பு கண்டனம் தெரிவித்துள் ளது.

பவ்ரல் அமைப்பு நேற்று விடுத் துள்ள அறிக்கையில்:

சனாதிபதித் தேர்தல் வடக்கு கிழக்கை தவிர ஏனைய இடங்களில் பாரிய வன்முறைகள் இன்றி இடம் பெற்றுள்ளது.

இந்தத் தேர்தல் பிரச்சாரங்களின் போது வன்முறைகள் ஏற்படாமை யானது, திருப்தி தருகின்ற விடயம் என்ற போதும், வடக்குக் கிழக்கில் மக்கள் முழுமையாக பங்குபற்றாமை சனநாயக வழி முறைகளை குறைத்து மதிப்பிடச் செய்துள்ளது.

சனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் ஆர்வம் காட்டுவதற்கு எவ் வித காரணங்களுமில்லை என தமி ழீழ விடுதலைப்புலிகள் அறிவித் திருந்தனர்.

எனினும் தமிழ் மக்கள் சுதந் திரமாக வாக்களிக்கலாம் என அவர் கள் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில் தேர்தல் தினத் திற்கு முதல்நாள் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமாக குறைந்தளவு மக்களே அங்கு வாக்களிக்க முன்வந்தனர் என பவ் ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை தென்னிலங்கை யிலும் தேர்தலுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்காரணமாக தென்னிலங்கை யிலும் குறிப்பிட்ட மக்கள் தொகை யினரின் வாக்களிப்புக்கு இடமளிக் கப்படவில்லை என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (32)

## இலங்கை அமைதி முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட விரும்புகிறோம்

வாழ்த்துச் செய்தியில் நோர்வே

இலங்கை அமைதி முயற்சி களில் தொடர்ந்தும் ஈடுபட விரும்புவ தாக சிறிலங்காவின் புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் நோர்வே தெரி வித்துள்ளது. இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக சூல்ஹெய்ம் அனுப்பியுள்ள வாழ்த் துச் செய்தியை நோர்வே வெளி விவகார அமைச்சு வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது;

சிறிலங்காவின் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜ பக்ஷவுக்கு நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சூல்ஹெய்ம் வாழ்த் துக்களைத் தெரிவித்துள்ளார். அமைதி முயற்சிகளுக்கான முன் னெடுப்புகள் உள்ளிட்ட விடயங் களில் சிறிலங்கா அரசுடன் இணைந்து செயற்பட நோர்வே விரும்புகிறது என்று தனது செய்தியில் எரிக்சூல்ஹெய்ம் கூறியுள்ளார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்காக மகிந்தவுக்கு மக்கள வாக்களித்துள்ளதாக சுட்டிக்காட்டி யுள்ள எரிக்சூல்ஹெய்ம், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை காப்பாற்றவும், விடுதலைப்புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்கவும் சர்வதேச சமூகம் உறுதியாக ஒத் துழைப்பு வழங்கும் என்றும் தெரி வித்துள்ளார். இலங்கை இனப்பிரச் சினையில் இருதரப்பினரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அனுசரணை யாளர் பணியை மேற்கொண்டு வரும் நோர்வே தொடர்ந்து இனப்பிரச்சினை யில் குறிப்பிடத்தக்க வகையில் செயற்பட உறுதியளிப்பதாகவும் அச்செய்தியில் எரிக்சூல்ஹெய்ம் கூறியதாக வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

## கொழும்பில் பங்குச் சந்தை சுட்டெண்கள் இறங்குமுகம்!

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்கு சுட்டெண்களும் நேற்று இறங்குமுகத்தை காட்டின.

சனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையிலேயே இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு பங்குச் சந்தையின் நிலவரம் திருப்தியாக இருந்தது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதித் தேர்தலில் பின்னடைவு கண்டதை அடுத்தே நேற்றையதினம் இறங்கு முக நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## மாரவிலவில் மீட்கப்பட்ட துப்பாக்கியே கதிர்காமர் கொலைக்கு பயன்படுத்தப்பட்டது

– அரச இரசாயன பகுப்பாய்வுப் பிரிவு

(கொழும்பு)

சிலாபம் மாரவில பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சினைப்பர் ரக துப்பாக்கியே லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டது என்று அரச இரசாயனப் பகுப்பாய் வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இந்தத் துப்பாக்கி பொலிசாரினால் கண்டு பிடிக்கப்பட்டது. கைக்குண்டுகளுடன் இரண்டு மைக்ரோ ரக பிஸ்டல்களும் இந்த சினைப்பருடன் கண்டுபிடிக்கப் பட்டன.

கதிர்காமரைக் கொலை செய்த பின்னர் இந்த ஆயுதத்தை மீண்டு மொரு முக்கிய பிரமுகரைக் கொலை செய்வதற்காக வைத் திருந்தபோது படைத் தரப்பினருக்கு அஞ்சி அதனை வழியில் விட்டுச் சென்றிருக்கலாம் என்று சிறிலங்காப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இந்த ஆயுதங்கள் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப் படவில்லை.

# மகிந்த சனாதிபதியாக தெரிவாகியதால் அமைதி முயற்சிகளுக்கு கடும்பாதிப்பு!

## ஊடகவியலாளர் சந்திப்பில் ரணில்

சிறிலங்காவின் சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப் பட்டிருப்பதன் மூலம் இலங்கையில் முறிவடையும் நிலையில் உள்ள அமைதி முயற்சிகளுக்குக் கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் தேர்தலில் தோல்வியடைந்தவருமான ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலா ளர்களிடம் நேற்றுப் பேசிய ரணில் விக்கிரமசிங்க,

தமிழீழவிடுதலைப் புலிகளின் புறக்கணிப்பால் வடக்கு கிழக்கில் தமிழர்கள் வாக்களிப்பது தடுக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு வாக்களிப்பில் குறைபாடு உள்ளது. முறிவடையும் நிலையில்அமைதி முயற்சிகள் உள்ளன. இந்தச் சூழலில் மகிந்தராஜபக்ஷவின் தெரிவானது அதை மேலும் பின்னடையச் செய்யும் என்று கூறினார்.

வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் நிலைமையே தேர்தல் பெறுபேறுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. தெற்கிலும் இலட்சக்கணக்கான வாக்காளர்கள் தேர்தல் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

எந்தவொரு வேட்பாளராயினும் அவர் பெரும்பான்மையான வாக்குகளைப் பெறவேண்டும். இன்று அந்த நிலைமை யாருக்கும் ஏற்படவில்லை. தேர்தல் என்பது முழு இலங்கையிலும் நடத்தப்பட வேண்டியது. பாராளுமன்றத்தைத் தெரிவு செய்யவும் சனாதிபதியைத் தெரிவு செய்யவும் மாகாணசபைகள் உட்பட உள்ளூராட்சி சபைகளைத் தெரிவு செய்யவும் முழு இலங்கையிலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எவ்வளவு பாடுபட்டும் இம்முறை அவ்வாறு நடத்தமுடியாது போய்விட்டது. எவருக்கும் தெளிவான பெரும்பான்மை இல்லை. வாக்களிக்கும் தேவை இருந்த இலட்சக் கணக்கான வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை.

மக்களின் நிகழ்ச்சிநிரலை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டாலே சமாதான நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

எமதுகொள்கை அவர்களது கொள்கையிலும் முற்றிலும் வேறுபட்டது. எனது கொள்கையை அங்கீகரிக்குமாறு நான் நாட்டு மக்களிடம் கூறினேன். எனது கொள்கையை அங்கீகரித்தால் அனைவரையும் இணைத்துக் கொள்வதாக நான் கூறினேன்.எனவே அதனை ஏற்றுக்கொள்கிறார்களா? இல்லையா? என்பது குறித்து முதலில் அவர்கள் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவட்ட ரீதியாக சனாதிபதித் தேர்தல் முடிவுகள்

| மாவட்டம் | மகிந்த | ரணில் | பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்டவை |
|---|---|---|---|---|---|
| 01.கொழும்பு | 534431 | 569627 | 1468537 | 1127129 | 12879 |
| 02.கம்பஹா | 596698 | 481764 | 1364180 | 1101001 | 11724 |
| 03.களுத்துறை | 341693 | 266043 | 764305 | 622377 | 6517 |
| 04.கண்டி | 315672 | 387150 | 907038 | 722437 | 9817 |
| 05.மாத்தளை | 120533 | 125937 | 321876 | 254405 | 3785 |
| 06.நுவரெலியா | 99550 | 250428 | 447225 | 361285 | 5410 |
| 07.காலி | 347233 | 239320 | 732289 | 600008 | 5540 |
| 08.மாத்தறை | 279411 | 165837 | 562987 | 455799 | 4077 |
| 09.அம்பாந்தோட்டை | 202918 | 112712 | 396595 | 322723 | 2798 |
| 10.யாழ்ப்பாணம் | 1967 | 5523 | 701938 | 8524 | 656 |
| 11.வன்னி | 17197 | 65798 | 250386 | 85874 | 1398 |
| 12.மட்டக்களப்பு | 28836 | 121514 | 318728 | 154615 | 1778 |
| 13.அம்பாறை | 122329 | 159198 | 396453 | 288208 | 2941 |
| 14.திருகோணமலை | 55680 | 92197 | 238755 | 152428 | 2094 |
| 15.குருநாகல் | 468507 | 418809 | 1124076 | 904955 | 8458 |
| 16.புத்தளம் | 160686 | 169264 | 470604 | 337319 | 3536 |
| 17.அநுராதபுரதம் | 231040 | 182956 | 536808 | 423997 | 4563 |
| 18.பொலநறுவை | 110499 | 97142 | 263609 | 212032 | 2002 |
| 19.பதுளை | 192734 | 226582 | 533163 | 433422 | 6825 |
| 20.மொனராகலை | 126094 | 92244 | 276109 | 224086 | 2636 |
| 21.இரத்தினபுரி | 294260 | 252838 | 668217 | 560584 | 5510 |
| 22.கேகாலை | 239184 | 223483 | 583282 | 473568 | 4795 |

### சனாதிபதியாக...

இலட்சத்து86 ஆயிரத்து 327 வாக்குகள் அதிகம் பெற்றுள்ளார். இந்தத் தெரிவை அறிவிக்கும் முகமாக நேற்றுப் பிற்பகல் தேர்தல் செயலகத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அமர்வு ஒன்றை கூட்டியிருந்தார். இதன் போது புதிய சனாதிபதியுடன் போட்டியிட்ட பல வேட்பாளர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

அங்கு உரையாற்றிய தேர்தல் ஆணையாளர் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் சனாதிபதித் தேர்தல்சரத்தின் கீழ் இந்தத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் பாதிக்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றமையாலும் இரண்டாவது நிலையைப்பெற்ற வேட்பாளரைவிட அதிகமான வாக்குகளை பெற்றமையையும் கருத்தில் கொண்டும் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதியாக தெரிவு செய்வதாக குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கில் நிலவும், நிலைமையை கருத்தில் கொண்டே விசேட ஏற்பாடுகளுடன் அங்கு தேர்தல் நடத்தப் பட்டது.அரச நிர்வாகமே சரிவர இயங்குவதில் பிரச்சினையை எதிர் கொள்ளும் வடக்கு கிழக்கில் தேர்தலை சரிவர நடத்த முடியாதது யதார்த்தமானது. இந்த நிலையில் தாம் தமது சேவைக்கு மேலதிகமாக நான்கு வருடங்கள் சேவையில் இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டதை சுட்டிக் காட்டிய அவர் தற்போதாவது தம்மை ஓய்வு பெற அனுமதிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க 46 இலட்சத்து 94 ஆயிரத்து 623 வாக்குகளைப் பெற்றார்.

இது மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 48.46 வீதமாகும். சிறிதுங்க ஜெயசூரிய 33 ஆயிரத்து 399 வாக்குகளைப் பெற்றார் இது 0.3 வீதமாகும்.

அசேல சுரவீர 29 ஆயிரத்து 480 வாக்குகளைப் பெற்றார். இது அளிக்கப்பட்ட வாக்குகளில் 0.3 வீதமாகும்.விக்டர் ஹெட்டி கொட 13 ஆயிரத்து 451 வாக்கு களை பெற்றார் .இது 0.1 வீதமாகும். சுமில் ஜெயநெத்தி எண்ணாயிரத்து 773 வாக்குகளைப் பெற்றார் இது அடங்கவில்லை.அருண டி சொய்ஸா 7 ஆயிரத்து 266 வாக்குகளைப் பெற்றார் விமல் கீகனகே ஆறாயிரத்து 283 வாக்குகளைப் பெற்றார். அநுர டி சில்வா ஐயாயிரத்து 952 வாக்குகளை பெற்றார் அஜித் குமார நாலாயிரத்து 775 வாக்குகளை பெற்றார். விஜேடயஸ*க்கு மூவாயிரத்து 248 வாக்குகள் கிடைத்தன.

நெல்சன் பெரேராவுக்கு இரண்டாயிரத்து 402 வாக்குகள் கிடைத்தன. சாந்த தம்மவிஜய ஆயிரத்து 253 வாக்குகளைப் பெற்றார். (32)

### மாவீரர்....

அத்துடன் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அதன் ஒலிபரப்பு நேரம் ஒன்றரை மணித்தியாலயங்களாக அதிகரிக்கின்றது. இதில் ஆசிய ஒளிபரப்பு தமிழீழ நேரம் இரவு 7.30 முதல் ஒன்பது மணி வரையும் ஐரோப்பிய ஒளிபரப்பு பிரான்ஸ் நேரம் இரவு 8.30 முதல் 10.மணி வரை இடம் பெறவுள்ளதாக தொலைக் காட்சி நிறுவனத்தினர் அறியத் தந்துள்ளனர்.

# வன்னிப் பிரதேச மக்களுக்கு மீட்புநிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட வன்னிப் பகுதி மக்களுக்கானகடன் மீளளிப்பு இன்றுமுதல் ஆரம்பமாகிறது என மீட்புநிதிக்கடன் மீளளிப்பு வேலைத்திட்டப்பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்பதாம் திகதி முதல் பதினைந்தாம் திகதி வரை கடன் மீளளிப்பில் தெரிவான யாழ்.மாவட்ட மக்களுக்கு கடன் மீளளிக்கப்பட்டது. முகமாலையில்அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சோதனைச்சாவடிக்கு அண்மையில் வைத்து இந்தமீளளிப்பு இடம்பெற்றது.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கில் வசித்து வரும்மக்களில் மீட்புநிதிக்கடன் செலுத்தியவர்களுக்கு விசேடதிட்டத்தின் மூலம் மீட்புநிதிக்கடன் மீளளிப்பு செய்யப்பட்டது. கடந்த பதினாறாம் திகதி பிற்பகல் 2.00மணிக்கு மருதங்கேணி மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்தநிலையில் வன்னிப்பகுதியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடன்மீளளிப்பு இன்று ஆரம்பமாகிறது. முதலாவதாக புளியங்குளம் மகாவித்தியாலயத்தில் காலை 8.00 மணி தொடக்கம் 10.30 வரையும்.நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 12.30 தொடக்கம் 1.30மணிவரையும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2.30 தொடக்கம் 3.30மணிவரையும்முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 5.00 தொடக்கம் 5.30 வரையும் வழங்கப்படும்.

நாளை (20.11.2005) பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் காலை 8.00தொடக்கம் 8.30 மணிவரையும் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் முற்பகல் 10.00தொடக்கம் 10.30மணிவரையும்மாங்குளம் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 12.30 தொடக்கம் 1.00மணிவரையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பிற்பகல் 2.30தொடக்கம் 3.30 மணிவரையும் வழங்கப்படும்.

22.11.2005அன்றுகாலை மடுவில் காலை 8.00மணிதொடக்கம் 8.30மணிவரையும் காத்தான்குளம் அ.த.க. பாடசாலையில் முற்பகல் 10.00 மணிதொடக்கம் 11.00மணிவரையும் விடத்தல்தீவு றோ.க.பாடசாலையில் பிற்பகல் 1.30மணிதொடக்கம் 2.00மணிவரையும் இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலையில் 2.30மணி தொடக்கம் 3.00மணிவரையும் மீளளிப்பு நடை பெறும். எனவே மேற்குறித்த பகுதிகளில் வசித்துவரும் மீட்புநிதி மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தவறாது பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வேண்டியுள்ளார்.

(லோ.தீ)

### அக்கரைப்பற்று...

நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக மேலதிக சிறிலங்காப் பொலிசார் அங்கு வரவழைக்கப் பட்டுள்ளனர்.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தவேளை நடைபெற்ற இந்தச் சம்பவமானது அரசியல் பின்னணியா அல்லது வேறு காரணமா? என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச்சம்பவத்தையடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக எல்லைப்பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்கள் அச்சம் காரணமாக தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி அக்கரைப்பற்று இராமகிருஸ்ணன் பாடசாலையில் தங்கியுள்ளார்கள்.

### வீரச்சாவு...

மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர் இம் மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### மறுதேர்தல்...

கட்சியின் சட்ட ஆலோசகர் கே. என். சொக்சி மற்றும் கட்சியின் செயலாளர் வீரகொட ஆகியோர் நேற்றுக்காலை தேர்தல் ஆணையாளரிடம் மனு ஒன்றை அளித்தனர். எனினும் இம்மனு நிராகரிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

### இரு ஏறாவூர்...

காலித் (வயது 32) ஆகியோர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஊர்காவல் படைவீரரான சின்ன லெப்பை கபீ மொகமட், கடந்த ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி ஏறாவூர் ஆற்றங்கரைக்கு மீன் வாங்கச் சென்ற போது இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டவர் என்றும்,

மத்திய கிழக்கிற்கு ஆட்களை அனுப்பும் மீராசாகிபு காலித் கடந்த மாதம் 23 ஆம் திகதி தனது வீட்டிற்கு வந்த தொலைபேசி அழைப்பையடுத்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு விடயம் தொடர்பாக கொம்மாந்துறைக்கு சென்ற போது காணமல் போயிருந்தவர் என்றும் வாழைச்சேனை பொலிசார் தெரிவிக்கின்றனர்.

### தமிழ்பேசும்...

உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்சம்பவமானது மக்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்காகவும், குறிப்பாக தமிழ், முஸ்லிம் இனங்களிற் கிடையேயான நட்புணர்வை சீர்குலைக்கும் ஒரு கபட நோக்கத்திற்காகவும் கைக்கூலிப் படைகளினால் திட்டமிட்டு நடாத்தப்பட்டுள்ளது .

இப்படியான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மூலம் சமாதான நிலமையை மேலும் குந்தகப்படுத்துவதற்காகவும், தமிழ் பேசும் உறவுகள் மத்தியில் பிரிவினையை உருவாக்குவதற்காகவும் மறைமுகமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இத்தீய சக்திகளை நாம் இனங்கண்டுள்ளோம். உண்மைகள் விரைவில் வெளிவரும் என்றும் அம்பாறை மாவட்ட அரசியல்துறை வெளியீட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

### அநுரா...

அளிக்கவில்லை. அதனால் அவருக்குப் பிரதமர் பதவி அளிப்பதில் அர்த்தம் இல்லை என்று மகிந்தவின் வட்டாரங்கள் தெரிவித்தன. அநுராவுக்கு பிரதமர் பதவியை கொடுப்பதற்கான காரணம் எதுவும் இல்லை என்று கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பேசிய வர்த்தகத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பகிரங்கமாக அறிவித்தார்.மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு பாடுபடவோ அல்லது ஆதரிக்காத அவர் எப்படி பிரதமராக முடியும் என்றும் ஜெயராஜ் கேள்வி எழுப்பினார்.பிரதமர் பதவிக்கு யார் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்க ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ள மறுத்துவிட்டார். இருப்பினும் சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்பு பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்றும் அவர் மேலும் கூறினார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.